வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வீர மலர்









Email : news@eelanadu.lk | மலர் : 01 | 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 323 | பக்கங்கள் : 20






08 அமெரிக்கா, இந்தியாவால் அரண் அமைக்கப்பட்ட இலங்கை


09 தலிபான்களுக்கு அங்கீகாரம் கிடைத்தால் தெற்காசியாவில் பெரும் தாக்கம் ஏற்படும்


13 எழுச்சியின் நாயகி





14 பிரிட்டனைப் பின் பற்றுமா போலந்து? 'போலெக்ஸிற்" அச்சத்தில் ஐரோப்பா


### மக்கள் வீதிகளில் இறங்கினால்

# கலவரங்கள் வெடித்து இரத்த ஆறு ஓடக்கூடும்

### அரசை எச்சரிக்கின்றார் கரு ஜயசூரிய



கொழும்பு, ஒக்ரோபர் 24

“விவசாயிகளும் நாட்டு மக்களும் வீதிகளில் இறங்கிப்போராட ஆரம்பித்தால், பாரிய கலவரங்கள் வெடித்து இரத்த ஆறு ஓடக்கூடும். எனவே, ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்க வேண்டும்.”

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய.

19

## மாகாண சபை தேர்தலில் சு.க. தனித்து களமிறங்கும்!

கொழும்பு, ஒக். 24

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா பொது ஜன பெரமுன கூட்டணியில் இருந்து விலகி, தனித்து போட்டியிடுவது

19

## மேலும் 19 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 24

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 19 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தகவலை அர

19

## 16 இராணுவத்தினர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக். 24

உணவு விஷமானதில் சுகவீனமுற்ற மட்டக்களப்பு வாகரை 233 படைப்பிரிவின் தலைமையக முகாமை சேர்ந்த 16 இராணுவத்தினர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

19

## பி.சி.ஆர். சோதனைகளை அதிகரியுங்கள் இல்லையேல் மீண்டும் பேராபத்து நிச்சயம்

### அரசுக்கு உபுல் ரோஹண எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 24

நாட்டில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை உடனடியாக அதிகரிக்க வேண்டும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் கடந்த மூன்று நாட்களில்

19

## நவ. 2 யாழில் கூடும் தமிழ் தேசிய கட்சிகள்

யாழ்ப்பாணம், ஒக். 24

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

”அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக, அது ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்காக

19

## எதிர்காலத்தில் எந்த பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படுமோ தெரியாது

### கைவிரிக்கிறார் வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஒக். 24

எதிர்காலத்தில் நாட்டில் எந்தப் பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதைத் தன்னால் கூற முடியாது எனவும், சில மூலப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டில் சில தொழிற்சாலைகளைக் கூட நடத்த முடியாத நிலைமை உருவாகலாம் எனவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து

19






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இளைஞர்களை தாக்கிய பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தம்!



கொழும்பு, ஒக். 24

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் இளைஞர்கள் இருவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்துள்ளார்.

வீதியில் பொலிஸ் அதிகாரி ஒருவர், இளைஞர்கள் இருவரைத் தாக்கும் வீடியோவை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ருவிட்டரில் பதிவிட்டு, பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, விடயத்தை ஆராய்ந்து அதிகாரியைப் பணியில் இருந்து இடைநிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரின் கொடுமைகள் தொடர்வதாக சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

சாணக்கியன் எம்.பிக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் சரத் வீரசேகர, ”இளைஞர்களைத் தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

வீதி விபத்தொன்றின் விடயங்களை ஆராய்ந்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியின் பணிக்கு இடையூறு செய்த காரணத்தால் குறித்த இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ)

## மூன்று விபத்துக்களில் மூவர் பரிதாப மரணம்!

கொழும்பு, ஒக். 24

மூன்று விபத்துக்களில் பெண்ணொருவர் உட்பட மூவர் மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தளை, லக்கல மொரகஹகந்த வீதி, யகாகடுல்ல வாவிக்கு அருகில், கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில், படுகாயமடைந்த கப்ரக வாகனத்தின் சாரதி மற்றும் கப்ரக வாகனத்தில் பயணித்த மூவர் உள்ளடங்கலாக நால்வர் தாஸ்கிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது சாரதி உயிரிழந்துள்ளார்.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே மரணமடைந்துள்ளார்.

அநுராதபுரம், தவரக்குளம் வீதி, 06 ஆம் மைல்கல் பிரதேசத்தில், மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று மின்சாரத் தூண் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

குருந்தன்குளம் பிரதேசத்தை சேர்ந்த 20 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் ஹபரண - தம்புள்ளை வீதி, 112 மைல்கல் பகுதிகளில், கப்ரக வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்ரக வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த கப்ரக வாகனத்தின் சாரதி மற்றும் கப்ரக வாகனத்தில் பயணித்த பெண் உள்ளிட்ட இருவரும் ஹபரண வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

தம்புள்ளை, வேல்வெஹர பிரதேசத்தை சேர்ந்த 56 வயது பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துக்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## 24 மணிநேரத்தில் 36 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 24

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 256 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 206 வாகனங்களில் பயணித்த 430 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

## மாணவர்கள் தடுப்பூசி ஏற்றுவதற்கு பாடசாலை சீருடை அவசியமில்லை

### கல்வி அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, ஒக். 24

கொரோனாத் தடுப்பூசி ஏற்றச் செல்லும் மாணவர்களுக்கு சீருடை அத்தியாவசியமாக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான மேலதிக செயலாளர் எல்.எம்.பி. தர்மசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை உறுதி செய்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

“நீண்ட காலமாக வீடுகளிலேயே இருந்தமையால், மாணவர்களின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பதனால், தடுப்பூசி ஏற்றத்துக்காக சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தங்களின் சீருடையை அணிந்துசெல்ல முடியாத நிலை ஏற்படலாம்.

எனவே, தடுப்பூசி ஏற்றத்திற்கு சீருடை அத்தியாவசியமாக்கப்படவில்லை என்பதுடன், சீருடை உள்ளவர்கள் அதனை அணிந்து செல்ல முடியும்.

அவ்வாறின்றேல், தடுப்பூசி ஏற்றத்துக்குப் பொருத்தமான ஆடையை மாணவர்கள் அணிந்து செல்ல முடியும்.

அத்தோடு அடையாள அட்டை உள்ள மாணவர்கள் அதனைக் கொண்டு செல்ல வேண்டும்” - என்றார். (இ)

### கல்வி TV CHANNEL-1

24.10.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2

24.10.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
24.10.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# போலி-நல்லிணக்க முகத்தின் தோல்வி?

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கி, அரசாங்க தரப்பினர் கொட்டியா (புலிகள்) என சத்தமிட்டிருக்கின்றனர். இதனை சுமந்திரன் கண்டித்திருப்பதாகவும் செய்திகள் பதிவாகியிருக்கின்றன. இது எதனை உணர்த்துகின்றது?

விடுதலைப் புலிகள் இல்லாமல் போய் 12 வருடங்கள் ஆகின்றன. இந்த 12 வருடங்களின் பின்னரும் கூட, சிங்கள அரசியல் சூழலில் சில அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதையே இந்த சம்பவம் உணர்த்துகின்றது. ஆனால் மறுபுறமாக பார்த்தால், சம்பந்தன் தனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்பதை காண்பிப்பதற்காக பகிரத பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்திருக்கின்றார்.

2012இல் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையொன்றில் விடுதலைப் புலிகள் அப்பாவி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை கொன்றார்கள், பல சிவிலியன் தலைவர்களை கொன்றவர்கள் - இதன் காரணமாகத்தான் அவர்கள் பயங்கரவாத அமைப்பாக நோக்கப்பட்டார்கள். என்னையும் கொலைப் பட்டியலில் வைத்திருந்தார்கள். நாங்கள் எப்படி விடுதலைப் புலிகளின் பதிலியாக இருக்க முடியும் - என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

கூட்டமைப்பை விடுதலைப் புலிகளோடு தொடர்புபடுத்தி எதிரணியினர் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் முகமாகவே இவ்வாறான தொனியில் பேசியிருந்தார். அதேபோன்று எம்.ஏ.சுமந்திரனும் தான் எப்போதுமே விடுதலைப் புலிகளை (வன்முறையை) ஆதரித்தவரல்லர் என்பதை அவ்வப்போது, அழுத்தி கூறியதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்பதை - தென்னிலங்கைக்கு கூறிக் கொள்வதில், முனைப்புடன் செயற்பட்டு வந்திருக்கின்றார்.

இதன் காரணமாக சுமந்திரன் தமிழ் சூழலில் கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளாகினார். ஆனாலும் தமிழ் சூழலிலுள்ளவர்களின் விமர்சனங்களை அவர் பெரிதாக பொருட்படுத்தவில்லை. அம்புலிமாமா கதையில் வருகின்ற, சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல் தனது நிலைப்பாட்டிலிருந்து ஒரு போதும் விலகாதவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பும் விடயத்திலும் ஒரு சர்ச்சை ஏற்பட்டது. அதாவது, இரண்டு தரப்பும் போர் குற்றங்களில் ஈடுபட்டன என்னும் சொற்தொடரை, சுமந்திரன் தனது கடிதத்தில் உட்புகுத்தியிருந்தார். அது ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ள விடயம் என்றாலும் கூட, அதனை மீண்டும் சுமந்திரன் அழுத்திக் குறிப்பிட வேண்டிய தேவை ஏன் எழுந்தது - என்று மற்றவர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். இது தொடர்பில் கேள்விகள் எழுந்த போது, தான் அப்படித் தான் நீதியை கோருவேன் - பக்கம் சார்ந்து தன்னால் நீதியை கோர முடியாது என்று, விறைப்பாக பதிலளித்திருந்தார்.

தென்னிலங்கையின் முன்னால் தங்களுக்கும் புலிகளுக்குமிடையில் ஒருவித தொடர்புமில்லையென்று பல முறை சத்தியம் செய்தபின்னரும் கூட, அவர்கள் விடுவதாயில்லை. அவ்வாறாயின் சம்பந்தன், சுமந்திரனின் நல்முக அரசியலின் பெறுமதி என்ன? ஒரு யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்க முயற்சியை, ஒருபோதும் பொய்களால் கட்டியெழுப்ப முடியாது. 2009இற்கு முன்னர் கூட்டமைப்பு வன்னியில் முகாமிட்டு, விடுதலைப் புலிகளின் ஆலோசனையின் பெயரில்தான் செயற்பட்டது என்பது உண்மை. அந்த உண்மை இலங்கையின் புலனாய்வுத் துறையும், சிங்கள அரசியல்வாதிகளும் நன்கறிந்த ஒன்று.

எனவே அந்த உண்மையை மறைக்க வேண்டியதில்லை. ஆனாலும் சம்பந்தன் போலித்தனமாக அந்த உண்மையை மறைக்க முயற்சித்திருந்தார். இப்படியெல்லாம் பேசினால், சிங்கள் மக்கள் மத்தியில் தங்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடைக்குமென்றும் சம்பந்தன் எண்ணியிருக்கலாம். ஆனால் அது தவறானது. ஏனெனில் அடிப்படைகளை மறைக்க வேண்டியதில்லை. 2009இற்கு முன்னர் ஒரு போராட்டம் இடம்பெற்றதும் அதனை அனைவரும் ஆதரித்திருந்ததும் உண்மை. ஆனால் அந்த அனுபவங்களுக்கு பின்னர்தான் நாம் இந்த இடத்தில் இருக்கின்றோம். இங்கிருந்து முன்நோக்கி பயணிப்பதற்கு எது தேவையோ, அதனை எடுத்துக் கொண்டு பயணிப்பதுதான் ஒரு ஆளுமைமிக்க தலைமையின் பண்பாக இருக்கமுடியும்.

புலியெதிர்ப்பு என்பதை சிங்கள அரசியல் தலைமைகள் எப்போதும் கைவிடப் போவதில்லை. அதற்காக பொய்களுடன் அவர்களுடன் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. உண்மைகளுடன் அவர்களை நேர்மையாக நிமிர்ந்து எதிர்கொள்வதுதான் சரியானது. ஏனெனில் இன்று விடுதலைப் புலிகள் கோரியதை எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையும் கோரவில்லை. எங்களுடைய அரசியல் பாதை தெளிவானதாக இருந்தால், மற்றவர்களின் கூச்சல்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

# பொய்யையும் புரட்டையும் பாராளுமன்றில் விதைத்தார் செல்வம் அடைக்கலநாதன்!

*கடந்த வெள்ளிக்கிழமை 22.10.2021.*

*பாராளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் பேசுகிறார்.*

*மடு தேவாலயத்துக்கு அண்மித்த விவசாயிகளின் வேளாண் பயிர் நிலச் சிக்கலில் வணக்கத்துக்குரிய ஞானசார தேரருக்கு என்ன வேலை என பாராளுமன்றத்தில் கேட்கிறார்?*

*கொழும்புக்கு அப்பால் கடலில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்த நிலையில் அங்கு இருந்தோருக்கு இழப்பீடு வழங்கவேண்டும் எனக் கருதினால் மல்கம் ரஞ்சித் நீதிமன்றத்தை நாடியுள்ளாரே!*

*வணக்கத்துக்குரிய ஞானசார தேரருக்கும் கருதினால் மல்கம் இரஞ்சித்துக்கும் என்ன வேறுபாடு?*

*இருவரும் தத்தம் சமய வழிபாட்டை நெறியாக்கும் குருமார்கள். அவர்களுடைய பணி, புத்த பல் சாலைகளுக்குள்ளும் கத்தோலிக்க தேவாலயங்களுக்குள்ளும் அடங்கிவிடும்.*

*கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு ஒரு நீதி. வணக்கத்துக்குரிய ஞானசாரருக்கு ஒரு நீதியா?*

*செல்வம் அடைக்கலநாதனின் கல்விப் பின்னணியும் அறிவுப் பின்னணியும் கத்தோலிக்க ஊறலும் இத்தகைய மோசமான முரண்பாடான பொருத்தமற்ற கருத்துக்களைத் தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றத்தில் பேசவைத்ததே.*

*தமிழ் மக்களின்சார்பில் பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்ற அறிவார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளைப் போலல்லாது தமிழ் மக்களின் அறிவார்ந்த மதிப்பைக் குறைக்கும் உரையாகச் செல்வம் அடைக்கலநாதனின் பாராளுமன்ற உரை அமைந்ததால் மனம் வருந்துகிறேன்.*

*அரசு காணியையும் கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவரின் தனியார் காணியையும் பாலாவிக் கரையையும் அடாத்தாகக் கையகப்படுத்தியவர் கத்தோலிக்க மன்னார் ஆயர்.*

*அங்கு உலூர்தம்மாள் தேவாலயத்தையும் மரியாள் உருவச் சிலைகளையும் அடாத்தாக எந்த அனுமதியும் இன்றிக் கட்டி உள்ளவர் மன்னார் ஆயர்.*

*கந்தையா வைத்தியநாதன் குடும்பத்தாரின் நிலத்தில் புத்த விகாரையை அமைத்ததாகச் செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்.*

*கந்தையா வைத்தியநாதன் வாழ்ந்த காலத்திலேயே அந்தக் காணியில் வெதுப்பகம் ஒன்றை அவர் நிறுவினார். அதற்காகச் சிங்கள புத்தர் குடும்பம் ஒன்றை அங்கு கொண்டு வந்தார்.*

*சிங்கள புத்த குடும்பம் அந்த நிலத்தில் அரச மரத்தடியில் புத்தரை வைத்து வழிபட்டு வந்தது. அந்த அரசமரம் இப்பொழுதும் அங்கே இருக்கிறது.*

*போர்க்காலத்தில் படைவீரர்கள் அந்தப் புத்த கோயிலைச் சிறிதளவு விரிவாக்கினார்கள்.*

*இப்பொழுது அந்த வளாகத்தில் அமைந்துள்ள புத்த விகாரைக்குள் சிவலிங்கம், திருமால், பிள்ளையார், முருகன், கலைமகள், திருமகள், வெற்றிமகள் ஆகிய சைவ கடவுள்களின் மூர்த்தங்கள் உள்ளன.*

*அந்த மூர்த்தங்களைச் சைவர்கள் சென்று வழிபட எவ்விதத் தடையும் இல்லை.*

*அரசு காணியையும் தனியார் காணியையும் பாலாவிக் கரையையும் அடாத்தாகக் கைப்பற்றிய கத்தோலிக்க மன்னார் ஆயரைக் குறை சொல்வாரா? செல்வம் அடைக்கலநாதன்.*


மடு தேவாலய காணி பிரச்னையில்
ஞானசாரர் மூக்கை நுழைப்பது ஏன்?
பாராளுமன்றத்தில் செல்வம் எம்.பி. கேள்வி

"எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பல் தீ விபத்து:
பேராயரின் மனு நவம்பர் 9 இல்
நீதிமன்றத்தில் விசாரணைக்கு

*புத்த விகாரைகளுள் சைவக் கடவுள்களின் மூர்த்தங்கள் உள்ளன.*

*அதே கடவுளர்களை அதுவும் திருக்கேதீச்சரம் கோயிலைச் சாத்தான் கோயில் என உடைத்து முற்று முழுதாக அழித்து கோயிற் கற்களைக் கொண்டு சென்று ஊர்காவற்றுறை கோட்டையையும் மன்னார்க் கோட்டையையும் கட்டிய போர்த்துக்கேயர் காலச் சோற்றுக் கத்தோலிக்கரின் வழிவந்தவர் அல்லவா செல்வம் அடைக்கலநாதன்?*

*திருக்கேதீச்சரம் மகா சிவராத்திரிக் காலத்தில் அமைத்த அலங்கார வரவேற்பு வளைவை உடைத்து சைவர்களின் நந்திக் கொடியைக் காலால் மிதித்து சைவர்களின் மனத்தைப் புண்படுத்திய மன்னார் ஆயரின் கையாட்களையும் போலிப் போதகர்களையும் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறாது திட்டமிட்டே மறைத்தார்.*

*கந்தையா வைத்தியநாதன் காலத்திலேயே அமைத்த சிறிய புத்த கோயிலைப் பெரிதாக்கிய விவகாரத்தைச் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் பேசுகிறார்.*

*அறிவை அடகுவைத்து உண்மையை மறைத்து பொய்களையும் புரட்டுகளையும் கத்தோலிக்கர் சார்பாகச் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் முன் வைத்த அத்தனை கருத்துக்களையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.*

**மறவன்புலவு க.சச்சிதானந்தன்**
*சிவ சேனை*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்
## 24.10.2021 – 30.10.2021

ஒக்.24 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி 7
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செவ்வாய், சந்திரன் சாதக நிலையில் உள்ளனர். சூரியபகவான் வழிபாடு நலம் அளிக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கு திட்டமிடுவீர்கள். எதிர்காலம் பற்றிய பயம் தோன்றும். பள்ளி கல்லூரி நண்பர்களால் சந்தோஷம் ஏற்படும். காதல் சம்பந்தமான மகிழ்ச்சியான நிகழ்வுகள் மனதிற்கு இதமளிக்கும்.குடும்பத்தினர், நண்பர்கள் மூலம் நன்மைகள் சேரும். கணவர், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். அதிகாரம் உள்ள பதவியில் அமர்வீர்கள். உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். உதவிகளும் நன்மைகளும் செய்து பாராட்டு பெறுவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ]

புதன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் உண்டு. துர்கை வழிபாடு தைரியம் வளர்க்கும். ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும். பிரயாணங்களால் செலவு ஏற்படலாம். நிலம் சம்பந்தபட்ட இனங்களில் புதிய முதலீடுகள் செய்ய ஏற்ற வாரம். பங்குச் சந்தையில் நிதானமாக ஈடுபடுங்கள். குழந்தைகள் வழியில் சுபச்செலவுகள் உண்டு. பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். விருப்பங்கள் நிறைவேறும். தொழில்செய்பவர்கள், போதியவாய்ப்பைப்பெறுவீர்கள்.கணவன் மனைவி ஒற்றுமை மேம்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

ராகு, கேது, புதன் நன்மைகளை வழங்குவர். சாய்பாபா வழிபாடு நன்மை தரும். வீட்டைச் சீர்செய்யத் திட்டங்கள் போடுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். புத்திர பாக்கியம் வேண்டியவர்களின் கனவு நனவாகும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். உடல்நிலை மிக லேசாக பாதிக்கப்படலாம். தொழில், வியாபாரம் சிறப்பாக இருக் கும். உறவினர்கள் வழியில் செலவுகள் கூடும். நண்பர்களை மகிழ்வித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் சில நேரங்களில் அமைதியும், முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குரு, சுக்கிரன், சந்திரன் அனுகூல பலனை தருவர். முருகன் வழிபாடு துன்பம் போக்கும். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த சிக்கல்கள் மெல்ல விடுபடும். தனிப்பட்ட வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். தொழிலதிபர்கள் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்துக் கொள்வர். அனைவரிடமும் கவனமாகப் பேசுங்கள். வீடு, நிலம் சம்பந்தமாக எடுக்கும் முயற்சி வெற்றி பெறும். பெரிய அளவிலான முதலீடுகளைத் தவிர்க்கவும். புதிய தொழில் தொடங்குவோர் ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது.உறவினர்களின் வழியில் கூடுதல் செலவு.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சனி, புதன், சுக்கிரன் அதிர்ஷ்டமான பலன்களை தருவர். குருபகவான் வழிபாடு சங்கடம் தீர்க்கும். கணவரின்/ மனைவியின் முயற்சியால் குடும்ப நிலை உயரும். சுப செலவுகள் ஏற்படும். புதிய வாகன சேர்க்கை ஏற்படும். பெண்கள் தங்க, வெள்ளி பொருட்கள் வாங்குவர். வியாபாரிகளுக்கு தன வரவு திருப்தி தரும். பெற்றோரின் உடல் நலன் சீராக இருக்கும். சுப நிகழ்ச்சிகள் தடை நீங்கி நடைபெறும். குழந்தைகள்வழியில் கூடுதல் செலவு ஏற்படும். பெற்றோரின் உடல் நிலை திருப்தி தரும். தவறான வழியில் கவன சிதறாமல் பார்க்கவும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

குரு, கேது புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். சிவன் வழிபாடு வளம் தரும். கடன் பிரச்னை சற்றே குறையத் தொடங்கும். பணியாளர்களின் வாழ்வில் நல்ல திருப்பம் வந்து சேரும். மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர். திட்டமிட்ட செயல்கள் தாமதமாகும். குழந்தைகள் உடல் நலனில் கூடுதல் கவனம் தேவை. தன வரவு திருப்தி தரும். பழைய கடன்கள் அடைபடும். தம்பதியரிடையே இணக்கம் ஏற்படும். முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு விலகும். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். உறவினர், நண்பர்கள் பல வழிகளில் உதவுவர்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சுக்கிரன், குரு கூடுதல் நற்பலன்களை தருவர் மகாலட்சுமி வழிபாடு சுபிட்சம் அளிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் குறையும். சுபநிகழ்ச்சி சம்பந்தமான பேச்சுக்கள் நடக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கணவன் மனைவியிடையே சுமூக நிலை காணப்படும். அதிக நற்பலன் எதிர்பார்க்க முடியாத வாரம் இது. பணியாளர்கள் சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. பிள்ளைகளால் உதவி கிடைக்கும். உடல்நலக்குறைவு ஏற்படலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சனி புதன் அற்புதப் பலனைத் தருவர். ராமர் வழிபாடு வளம் தரும். செலவுகள் குறையும். நிறைவோடு இருப்பீர்கள். தொலைத்தொடர்பு அனுகூலம் தரும். தொழில் வியாபாரத்தில் புதிய முயற்சிகளைச் சற்று தள்ளிவைக்கவும். போட்டியாளர்களை சமாளிக்க நேரிடும். பிள்ளைகளின் செயல்பாட்டால் டென்ஷன் அதிகரிக்கும். சருமப் பாதுகாப்பில் கவனமாக இருங்கள். வெளிநாடு, பேச்சிலும் செயலிலும் கவனமாக இருங்கள். தடைகள் ஏற்பட்டாலும் முயற்சிகள் நல்லபடியாக நிறைவேறும். மன தைரியத்தைக் கைவிட வேண்டாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

சூரியன், செவ்வாய், கேது நற்பலன்களை வழங்குவர். வீரபத்திரர் வழிபாடு நலம் தரும். கற்பனை பயம் காரணமாகத் தூக்கம் குறையும். மலைபோல் வரும் சிரமம் பனி போல் நீங்கும். உங்கள் வாழ்வுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி கிடைப்பார். குடும்பத்தில் ஒருவர் வெளியூர் அல்லது வெளிநாட்டில் தங்கும் நிலை ஏற்படும். வசிப்பிடத்தை மாற்ற உகந்த நேரம் அல்ல. நீங்கள் மதிக்கும் நபர் ஒருவர் உங்களை மகிழ்ந்து பாராட்டுவார். வெளியில் சிரித்துப் பேசி உள்ளுக்குள் வெறுக்கும் நபரை இனம் காண்பீர்கள். உணவுப் பழக்கத்தில் எச்சரிக்கை.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சுக்கிரன், கேது, சந்திரனால் நன்மை கிடைக்கும். ஐயப்பன் வழிபாடு வளம் தரும். சகோதர சகோதரிக்கு உதவுவீர்கள். சொத்து பிரச்னை தீரும். தாய்வழி உறவினரிடையே இருந்த பிரச்னை நீங்கும். உங்கள் மீதான மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசு சம்பந்தமான விஷயங்களில் இருந்த தேக்க நிலை மாறும். குலதெய்வப் பிரார்த்தனைகள், மனநிறைவு தரும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாழ்வு மனப்பான்மை நீங்கும். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். உங்கள் மனதை வாட்டிய பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சூரியன், சுக்கிரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும் கருடன் வழிபாடு சுபிட்சம் தரும். குடும்பத்தில் குழப்பங்கள் உருவானாலும் அவை நல்ல முறையில் தீரும். டென்ஷன், கனவுத்தொல்லை தீரும். புதிய விஷயங்களில் ஆர்வம் ஏற்படும். நிறைய உழைத்து லாபம் காண்பீர்கள். சுபசெலவுகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். வெளிநாடு சம்பந்தமான முயற்சிகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். பாஸ்போர்ட், விசா பெறுவதில் இருந்த சிரமங்கள் தீரும். கவலைகள் மறையும். உற்சாகமான பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குரு, புதன், சனி அதிர்ஷ்ட பலன் வழங்குவர். மகாலட்சுமி வழிபாடு வினை தீர்க்கும். சுபச்செலவால் மகிழ்வீர்கள். தாயாரின் தேவையை நிறைவேற்றி ஆசியை பெறுவீர்கள். குழந்தைகளின் கலைத் திறமை வெளிப்படும். சமூகத்தில் கவுரவம் கூடும்.குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சகோதரர் அல்லது சகோதரிக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். பங்காளிச் சண்டைகள் மறையும். புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். விருப்ப ஓய்வு பெறும் எண்ணம் வரும். நிதி நிலைமை மேம்படும்.

# கொரோனா வைரஸ் மாறுபாடுகள் உருவாகிக் கொண்டே இருக்குமா?

**நோய் எதிர்ப்பு திறனை குறைக்கும் வகையில் வைரஸ்கள் புதிய பிறழ்வுகளை ஏற்படுத்தக் கூடும். அத்தகைய சூழலில் வருடாந்திர காய்ச்சல் தடுப்பூசிகள் மாதிரி கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்க ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரை செய்வார்கள்.**



*கொரோனா வைரஸின் மாறு பாடுகள் தொடர்ந்து உருவாகிக் கொண்டிருக்குமா என்ற கேள்வி கேட்டால், புதிதாக கொரோனா வைரஸ் மற்றவர்களுக்கு பரவும் வரை தொற்று ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தான். ஆனால் தொடர்ச்சியாக மாறுபாடுகளை உருவாக்கும் அல்லது அதிக ஆபத்தை விளைவிக்கும் என்று அர்த்தம் இல்லை.*

*உலக மக்கள் தொகையில் பாதி பேர் இன்னும் கொரோனா தொற் றுக்கு எதிராக தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை எனவே தொடர்ந்து புதிதாக மக்களை பாதித்து அவர்களின் உடலில் ஆயிரக்கண கான வைரஸ்களை அடுத்த சில மாதங்கள் அல்லது வருடங்கள் வரை பிரதி எடுக்கும். ஒவ்வொரு முறையும் ஒரு வைரஸ் தன்னை பிரதி எடுக்கும் போது சிறிய அளவில் பிறழ்வுகள் இருக்கத்தான் செய்யும். இந்த சிறிய பிறழ்வுகள் புதிய மாறுபாட்டினை உருவாக்க உதவும். ஆனால் 2019ஆம் ஆண்டு வைரஸ் வளர்ச்சி அடைந்தது போன்று தற்போது வளர்ச்சி அடையாது.*

*ஒரு வைரஸ் ஒரு புதிய உயிரினத்தைப் பாதிக்கும்போது, அது புதிய ஹோஸ்ட்டுக்குப் பரந்து விரிந்து பரவ வேண்டும் என்று பென்சில்வேனியா மாநில பல்கலைக்கழ கத்தின் வைரஸ் நிபுணர் ஆண்ட்ரூ ரீட் கூறுகிறார்.*


*நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங் களின் தரவுகள் படி முந்தைய வைரஸ் மாறுபாட்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு பரவும் தன்மை கொண்டது டெல்டா வைரஸ். இது மேலும் பிறழ்வுகள் அடைந்து அதிக பாதிப்புகளை தரும் வைரஸ் மாறுபாடாக மாற முடியும். ஆனால் மறுபடியும் இரண்டு மடங்கு பரவும் சக்தியை கொண்டிருக்காது என்று மிச்சி கன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் தொற்றுநோய் ஆராய்ச்சியாளர் டாக்டர் ஆடம் லெளரிங் கூறியுள்ளார்.*

*வைரஸிற்கான விரைவான பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டத்தை நாங்கள் பார்த் தோம். இது பல்வேறு சேதங்களை உருவாக்கி யுள்ளது. ஆனால் மேற்கொண்டு தீங்குகளை விளைவுக்கும் பண்புகளை அது கொண்டி ருக்கவில்லை என்று ஆடம் கூறியுள்ளார்.*

*வைரஸ் மோசமான விளைவுகளை ஏற் படுத்தும் வகையில் உருமாறக் கூடும் ஆனால் அதற்கேற்ற பரிணாம வளர்ச்சி அந்த வைரஸில் இல்லை. அதே போன்று மிகவும் தீவிரமான பாதிப்பிற்கு ஆளாகியுள்ள மக்களும் வெளியே சென்று மற்றவர்களுடன் பழகி, வைரஸை பரப்பும் செயல்களை விரும்பவில்லை.*

*தடுப்பூசிகள் மற்றும் தொற்றுகளின் விளைவாக ஏற்கனவே மக்கள் உருவாக்கியுள்ள எதிர்ப்பு திறனை எதிர்த்து புதிய மாறுபாடுகள் பரவுமா என்று நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். நிறைய பேர் தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டுள்ள நிலையில், குறைவான தட்ப்பு திறனை கொண்ட மக்களி டம் மட்டுமே பரவும் வாய்ப்பினையே வைரஸ் கள் கொண்டிருக்கும் என்று டாக்டர் ஜோஷ்வா ஸ்ச்சிஃபெர் கூறியுள்ளார். அவர் ஃப்ரெட் ஹூட்சின்சோன் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் வைரஸ் நோயியல் ஆராய்ச்சியாளராக உள்ளார்.*

*நோய் எதிர்ப்பு திறனை குறைக்கும் வகையில் வைரஸ்கள் புதிய பிறழ்வுகளை ஏற்படுத்தக் கூடும். அத்தகைய சூழலில் வருடாந்திர காய்ச்சல் தடுப்பூசிகள் மாதிரி கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்க ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரை செய்வார்கள்" என்றும் அவர் கூறினார்.* **- எக்ஸ்பிரஸ் இந்தியா**



# டெல்டா பிளஸ் திரிபு பரவும் அபாயநிலை

## சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 24

**வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் மூலம் இலங்கையில் டெல்டா பிளஸ் திரிபு பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**



கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனை குறிப்பிட்டார்.

நாட்டில் டெல்டா பிளஸ் திரிபடையுமாயின் பொதுமக்களின் செயற்பாடு அதற்கு காரணியாக அமையும் எனவும் அவர் கூறினார்.

எனவே பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றுவது அவசியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் டெல்டா பிளஸ் திரிபு குறித்து நாட்டில் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகள் ஊடாக பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஹேமந்த ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

# ஞாயிறு கடைகளை திறக்குமாறு யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரன் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரொனா சூழ்நிலை காரணமாக நீண்ட காலமாக முடக்கப்பட்டிருந்த யாழ். நகரம் படிப்படியாக தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது.

வரும் தீபாவளி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளை திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வர்த்தகர்களை கேட்டுக் கொள்கிறோம்.

இதன் மூலம் பொதுமக்களும் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அத்தோடு குறித்த வர்த்தக நிலையங்களை திறப்பதற்காக ஏற்கனவே யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் ஏனைய துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடப்பட்டு உள்ளது. வர்த்தகர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தங்கள் கடைகளை திறந்து வழமை போல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும்-என்றார். (அ-03)

# தாக்கப்பட்ட இளைஞனுக்கு இழப்பீடு வழங்க இரண்டு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக். 24

கொடூரமாக தாக்கப்பட்ட இளைஞருக்கு ரூபா 100,000 இழப்பீடாக வழங்கும்படி அநுராதபுரம் பொலிஸில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

2017ஆம் ஆண்டு, அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைதுசெய்து, கட்டித் தொங்கவிட்டு மனிதாபிமானமற்ற முறையில் தாக்கினார் என மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கு செலவாக தலா ரூபா 25 ஆயிரத்தை மனுதாரருக்கு அவர்களது தனிப்பட்ட நிதியிலிருந்து இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

நீதியரசர்களான விஜித் மலல்கொட, மஹிந்த சமயவர்தன, துரைராஜா ஆகியோர் இந்த தீர்ப்பை வழங்கினர்.

# மேலதிக வகுப்புக்களை நடத்த விரைவில் அனுமதி

கொழும்பு, ஒக். 24

நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அகில இலங்கை நிபுணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அந்த சங்கத்தின் தலைவர் அமித் புஸ்ஸல்ல தெரிவித்தார்.

வகுப்பறை ஒன்றில் 50 வீதம் அல்லது அதிகபட்சமாக 100 மாணவர்கள் மாத்திரமே கலந்து கொள்ளும் வகையிலான விசேட சுகாதார சுற்றறிக்கை ஒன்றை தயாரித்து வழங்குமாறு நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கொரோனா செயலணியின் போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# சுவர் இடிந்து விழுந்து சிறுவன் பலி!

கொழும்பு, ஒக். 24

பல்லம, கட்டுபொல பிரதேசத்தில் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 12 வயதான சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

சுவருக்குள் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் அவன் உயிரிழந்துள்ளான் என பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மீண்டும் பயணத்தடை வரலாம்!

கொழும்பு, ஒக். 24

தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை, எதிர்வரும் 31ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்படவுள்ளதாக அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், பயணத்தடை தளர்த்தப்பட்டாலும் பொது மக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து செயற்படுகிறார்களா என்பதை கண்காணிக்கவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார். எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்குமானால் மீண்டும் பயணத்தடைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைக்கு நாட்டை இழுத்துச் செல்லவேண்டாம் எனவும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்படுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

# கொரோனாவுக்கு மத்தியில் மீண்டும் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஒக். 24

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 21,154 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்தோடு இந்த ஆண்டில் 10 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலும், கண்டி, பதுளை, இரத்தினபுரி, குருநாகல், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# எலி காய்ச்சலால் இருவர் மரணம்



கொழும்பு, ஒக். 24

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தணிந்துவரும் நிலையில் மறுபுறத்தில் டெங்கு நோயும், எலிக்காய்ச்சலும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன.

கடந்த ஜூன் மாதம் முதல் கடந்த 20ஆம் திகதிவரையான 04 மாதங்களுக்குள் இலங்கையில் எலிக்காய்ச்சல் காரணமாக 250 பேர் பாதிக்கப் பட்டுள்ளதோடு அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த 250 நோயாளர்களும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் மாவனெல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச ஊழியர்களுக்கு பட்ஜெட்டில் அரசு சம்பள உயர்வு வழங்குமா?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் கேள்வி

கொழும்பு, ஒக். 24

அரசாங்க ஊழியர்களுக்கு 03 ஆயிரம் ரூபா முதல் 24 ஆயிரம் ரூபா வரை சம்பள உயர்வு வழங்க எமது அரசு தீர்மானித்தது. 2020 முதல் சம்பள உயர்வு வழங்க நிதி கூட ஒதுக்கப்பட்டது. எனவே ரனுக்கே அறிக்கைபடி அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் பட்ஜெட்டில் அரசாங்கம் சம்பள உயர்வு வழங்குமா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார்.

விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 03 ஆயிரத்தில் இருந்து 24 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்க எமது கடந்த அரசாங்கம் முடிவு செய்தது. அமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கி 2020 இல் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் அதனை நிறுத்தியது. ஓய்வூதியம் பெறுவோருக்கு ஒதுக்கிய நிதி நிறுத்தப்பட்டது. ரனுக்கே அறிக்கை படி அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் பட்ஜெட்டில் அரசாங்கம் சம்பள உயர்வு வழங்குமா, மக்களுக்கு வழங்குவதாக தெரிவித்த நிவாரணங்கள் எங்கே?. பெற்றோல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் ஓய்வூதியம் பெறுவோர் எப்படி வாழ்வது? - என்றார்.

ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன இதற்கு பதிலளித்த போது,

பொறுப்பான அமைச்சர் அடுத்த வாரம் பதில் வழங்குவார்.

03 இலட்சம் அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதை கடந்த அரசு நிறுத்தியது. ஆனால் அதனை வழங்க எமது அரசு நடவடிக்கை எடுத்தது. அக்ரஹார காப்புறுதியை அனைத்து ஊழியர்களுக்கும் வழங்க எமது அரசு முடிவு செய்துள்ளது. இது பற்றி அவர் பேசவில்லை. அக்ரஹார காப்புறுதியை உங்கள் அரசு வழங்கவில்லை. வெட்கமில்லையா? எமது அரசு தான் அதனையும் வழங்கியது. விவசாயிகளின் பிரச்னை பற்றி எமக்கு தெரியும். அவர்களின் நெல்லுக்கு அதிக விலை வழங்கப்பட்டது. விவசாயத்தையும் பெருந்தோட்டத்துறையையும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் எமது நிவாரண திட்டங்களை முன்வைப்பார்-என்றார்.

# அரிசி மற்றும் பருப்பு விலைகளை பார்க்கவா என்னை நியமித்தீர்கள்?



## கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 24

**என்னை ஜனாதிபதியாக நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலைகளை பார்த்துக் கொள்வதற்கு என்றால் அதற்கு நான் தேவையில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

விவசாயப் பண்ணை ஒன்றைப் பார்வையிட நேற்று சென்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - "எங்களது முந்தைய அரசாங்கங்கள் கூட இதைச் செய்ய முயற்சித்தன. இது கடினமான பணி. எனது முன்னோர்களுக்கு தெரியும் பாரம்பரிய பயிர்ச் செய்கையை எப்படி செய்வது என்று. ஆனால் துரதிஷ்டவசமாக எந்த தலைவரும் இந்த முடிவை எடுக்கவில்லை.

என்னை நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலையைப் பார்த்துக் கொள்வதற்காக என்றால் அதற்கு நான் தேவையில்லை. அதை விட மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்காகவே. விசேடமாக இந்த விவசாயத்துறை தொடர்பில். நான் வந்தது முதல் உரத்தை இலவசமாக வழங்கினேன். உண்மையில் விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே இலவசமாக வழங்கப்பட்டது. அதேபோல், நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்தோம்."-என்றார். (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் 10 வீடுகள் சேதம்!



வவுனியா, ஒக். 24

வவுனியாவில் நேற்றய தினம் பெய்த கடும்மழை மற்றும் காற்றினால் பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பயன்தரும் மரங்களும் அழிவடைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன் தினம் பெய்த கடும் மழை மற்றும் காற்று காரணமாக வவுனியா இராசேந்திரங்குளம், சூடுவெந்த புலவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் சில வீடுகளின் கூரைத் தகடுகள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, அரபாத் நகர் பகுதியில் வீசிய கடும்காற்றினால் செய்கைபண்ணப்பட்டிருந்த வாழை மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

# கோப்பாயில் வீடு புகுந்து அடாவடி: ஓட்டோ சாரதி உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 24

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பிசுங்கான் போத்தல்களுடன் புகுந்த அட்டூழியத்தில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், வன்முறையில் ஈடுபட்டோர் வாடகைக்கு அமர்த்திச் சென்ற ஓட்டோச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 11 பேர் கொண்ட கும்பல் வீடொன்றுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டது.

இந்த சம்பவத்தில் கதிர்காமநாதன் குணரட்ணசிங்கம் (வயது-58) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டு யன்னல்கள், மோட்டார் சைக்கிள், மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்தின் கண்ணாடி என பன அடித்துடைத்து சேதம் விளைவிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கும் அயலில் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞனுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஒன்று ஏற்பட்டிருந்தது. இதற்கு பழிவாங்கவேன் எனச் சபதம் போட்ட அந்த இளைஞன் சிலரை அழைத்து இந்த அடாவடியில் ஈடுபடவைத்தார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய நீர்வேலியைச் சேர்ந்த இருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர்

அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் வாடகைக்கு அமர்த்திச் சென்ற ஓட்டோ பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது. அதன் சாரதியான நாயன்மார்க்கட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஏனைய 9 பேர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)





# சவப்பெட்டி ஏந்தி ஒப்பாரி வைத்து ஹப்புத்தளையில் மக்கள் போராட்டம்

கொழும்பு, ஒக். 24

பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹப்புத்தளை நகரில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சவப்பெட்டியை ஏந்தியும், ஒப்பாரி வைத்தும் போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன், தமக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர்.

அதேபோல தோட்ட நிர்வாகங்களின் அடாவடியைக் கண்டித்தும் இதன்போது கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் அரசியல் பிரமுகர்களும், பொதுமக்களும் பங்கேற்றனர்.

# சீன கப்பல் கொழும்பு துறைமுகத்துக்குள் உள்நுழைவதை தடுக்குமாறு அறிவிப்பு!

கொழும்பு, ஒக். 24

சீனாவிலிருந்து இலங்கைக்கு சேதனப் பசளையை கொண்டு வரும் சீனக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதை தடுக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அறிவித்துள்ளதாக ஹார்பர் மாஸ்டர், கப்டன் நிர்மல் டி சில்வா தெரிவித்துள்ளார்.

20,000 மெற்றிக் தொன் சேதன பசளையுடன் குறித்த கப்பல் நேற்றுமுன்தினம் மாலை நாட்டை வந்தடையும் என தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம் கொழும்புத் துறைமுகத்துக்கு அறிவித்திருந்தது.

நாட்டுக்கு வருகை தரும் கப்பலில் காணப்படும் பசளையில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் காணப்படுவதாகவும் தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம் தெரிவித்திருந்தது.

எனினும், குறித்த கப்பல் கொழும்புத்துறைமுக எல்லைக்குள் இதுவரை பிரவேசிக்கவில்லை எனவும், வருகை தருவது தொடர்பில் எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை எனவும் ஹார்பர் மாஸ்டர் குறிப்பிட்டார்.

சீன நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பசளைகளின் மாதிரிகளில் பக்டீரியா காணப்படுகின்றமை இரண்டு சந்தர்ப்பங்களில் உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெரிய வெங்காயம் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 24

உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்கத்தின் தலைவர் யூ.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வரும் மாத்தளை, அனுராதபுரம், பொலனறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தற்போது அறுவடை செய்யும் வெங்காயத்தை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். 120 முதல் 140 வரை ஒரு கிலோ வெங்காயம் பொருளாதார மத்திய நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை சந்தையில் அதிகரித்துள்ளது. இம்முறை வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதோடு விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது-என்றார்.

# தனியார்துறை ஓய்வூதியம் குறித்த சட்டமூலம் அடுத்த மாதம் சபைக்கு

கொழும்பு, ஒக். 24


தனியார்துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயது தொடர்பான சட்டமூலம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க பாராளுமன்ற விவகாரக் குழு முடிவு செய்துள்ளது.

இந்த சட்டத்துக்கு அமைவாக தனியார்துறை ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வூதிய வயதை 60ஆக உயர்த்துவதற்கான பரிந்துரையும் உள்ளடங்குகிறது.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவது தொடர்பான 1956 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க சட்டத்தின் கீழான அபாயகரமான தொழில் வாய்ப்பு வர்த்தமானி அறிவிப்பை திருத்துவதற்கான பிரேரணையும் அன்றைய தினம் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது




# மீனவர் கறுப்புக்கொடி போராட்டம்: இந்திய இராஜதந்திரத்தின் சறுக்கலா?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

*ஒக்ரோபர் 21ஆம் திகதி, சரியாக காலை 10.35 மணிக்கு, இந்தியா தனது 100 கோடி கோவிட் தடுப்பூசிகள் இலக்கை எட்டி, ஒரு வரலாற்று சாதனையைப் படைத்தது. ஜனவரியில் பிரதமர் நரேந்திர மோடி துவக்கிவைத்த தேசிய தடுப்பூசித் திட்டத்தில் இது மேலும் ஒரு மைல்கல்.*

*எதிர்பார்த்தபடியே அன்று அரசு விழாக்கோலம் பூண்டது. மருத்துவமனைகளில் பலூன் அலங்காரம் செய்யப்பட்டு இனிப்புகள் விநியோகிக்கப்பட்டன. தேசிய நினைவுச் சின்னங்களும் புகழ்பெற்ற கட்டடங்களும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. தனது மகிழ்ச்சியையும் நியாயமான பெருமிதத்தையும் நாட்டு மக்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பிய பிரதமர் மோடி, நாட்டு மக்களிடையே உரை நிகழ்த்தினார். தன்னுடைய கோவிட் எதிர்ப்பு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார். அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு, கடுமையான உழைப்பு, தேசப்பற்று ஆகியவை இந்த வெற்றிக்கு எந்த அளவுக்கு உதவியிருக்கின்றன என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார். "இந்த தடுப்பூசித் திட்டம் அறிவியலில் இருந்து பிறந்து, அறிவியல் அடிப்படையில் அறிவியலால் செலுத்தப்பட்டிருக்கிறது. தடுப்பூசிகளின் உருவாக்கம் முதல், அதை செலுத்துவது வரை எல்லா நிலைகளிலும் அறிவியலே அடிப்படையாக இருந்திருக்கிறது" என்று அவர் கூறினார். மேலும், இந்தியாவின் தடுப்பூசித் திட்டம் 'மேக் இன் இண்டியா' திட்டத்தின் ஒரு முன்னோடி உதாரணம் என்றும், இதுபோன்ற உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்கவேண்டும் என்றும் பிரதமர் மோடி நினைவுபடுத்தினார்.*

*இந்தியாவின் 1.39 பில்லியன் மக்கள் தொகையில் 31 வீதம் பேருக்கு மட்டுமே இரண்டு தவணையும், 75 வீதம் மக்களுக்கு முதல் தவணையும் தடுப்பூசி வழங்கப்பட்டிருக்கிறது என்பதால் நாம் பயணிக்கவேண்டிய தூரம் நிறைய இருக்கிறது என்பது உண்மைதான். தனது 1.41 பில்லியன் மக்கள் தொகையில் 70 வீதத்துக்கும் மேலான மக்களுக்கு சீனா முழுமையாக தடுப்பூசி வழங்கியிருக்கிறது.*

*கோவிட் தடுப்பூசி இலக்கில் இந்தியாவின் 100 கோடி சாதனையைப்பற்றி நான் நிறைய பேசியிருக்கிறேன். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. கோவிட்டுக்கு எதிரான இந்தப் போரில் தடுப்பூசிகளை உருவாக்கிய விஞ்ஞானிகள் மற்றும் அறிவியலைப் பற்றிய தனது பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் பிரதமர் மோடி மக்களுடன் பகிர்ந்துகொண்டதைப் பற்றிக் கூறியிருக்கிறேன். தடுப்பூசியில் தற்சார்பு என்ற நிலையை மட்டுமல்லாமல், தடுப்பூசிகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தகுதியையும் இந்தியா அடைந்துவிட்டது.*

*என்னுடைய ஈழ நண்பர்களும் இதைப்போலவே அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையை நினைத்துப் பெருமைப்படவேண்டும் என்பதே எனது கனவு. மக்களுக்கான தற்சார்பையும் அவர்கள் அடையவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஈழத்தில் தடுப்பூசித் தட்டுப்பாடு நிலவுவதாக நான் கேள்விப்படுகிறேன்.*

*கடவுளின் கிருபையால் இன்னொருமுறை இதுபோல் வைரஸ் வியாதிகள் நெருங்காமல் இருக்கட்டும். இருப்பினும், எல்லா பிரச்னைகளையும் எதிர்கொள்ளவும், வெல்லவும் உங்களைத் தயார்ப்படுத்திக்கொள்வதுதானே நல்லது? பிரச்னைகளை விடுங்கள், எல்லா வகையிலும் நாம் முன்னேற்றம் அடையவேண்டாமா? ஆரம்பப் பள்ளிக்கூடம் தொடங்கி தொழிற்படிப்புகள் வரை சர்வதேசத் தரத்திலான கல்வி, சர்வதேச கூட்டுறவு கொண்ட ஆராய்ச்சிகள், அரசின் குறைந்த நிதி ஒதுக்கீட்டை மட்டுமே நம்பவேண்டிய கட்டாயம் இல்லாமல் போதுமான ஆராய்ச்சி நிதி ஆகியவை எல்லாம் இருந்தால்தான் நமது சமூகம் ஒட்டுமொத்தமாக முன்னேறும். செல்வாக்கு கொண்ட புலம்பெயர் தமிழர்கள், ஈழத்தில் கஷ்டப்படும் தங்களது சொந்தங்களைத் துயரத்திலிருந்து மீட்க பெருமளவில் உதவி செய்ய முடியும். கூட்டு முயற்சியின்மூலமாக இந்தியாவில் உள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்களும் இதற்கு உதவலாம்.*

*ஈழப் போர் முடிந்த சில மாதங்களில், என் புலம்பெயர் நண்பர்கள் பலருக்கு நான் மின்னஞ்சல் அனுப்பினேன். ஈழத்தில் கல்வி மற்றும் மேம்பாட்டுக்குப் பங்களிக்குமாறு அதில் கேட்டிருந்தேன். பிரபாகரன் இறந்தபின்பு விடுதலைப் புலிகளும் இல்லாத நிலையில் ஈழ மக்களுக்குப் புலம்பெயர் தமிழர்கள் மட்டுமே வலுவான உதவியை வழங்க முடியும் என்று கூறியிருந்தேன். இலங்கையில் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள், சிங்கள அரசுக்கு எதிராகப் போராடி மக்களுக்குப் பங்களிக்க முடியாத நிலையில் இருப்பதையும் நான் சுட்டிக் காட்டினேன். உலகின் பல இடங்களில் உள்ள புலம்பெயர் அமைப்புகள் ஒரு குடையின்கீழ் சர்வதேசத் தமிழர்கள் கூட்டமைப்பாகத் திரளவேண்டும் என்று வேண்டினேன். இதன்மூலம் நிதி உதவியையும் பிற*



*வளங்களையும் ஒன்றுதிரட்டி, கூட்டமைப்பை வலுப்படுத்துவதோடு, தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கான ஒரு சரியான வரைவு அறிக்கையை உருவாக்கி எல்லாரும் அதைத் தெளிவாகப் பின்பற்ற முடியும். என் புலம்பெயர் நண்பர்கள் இதை ஏற்றுக்கொண்டனர். சிலர் உற்சாகத்துடன் அதை வரவேற்கவும் செய்தனர். ஆனால், அதன்பிறகு ஒன்றும் நடக்கவில்லை.*

*என் மின்னஞ்சலுக்கு புலம்பெயர் நண்பர்களின் உற்சாகமான வரவேற்பைத் தொடர்ந்து நான் தமிழகத்தில் சில நண்பர்களிடம் ஈழத்தில் நாம் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றிப் பேசினேன். அதில் சிலர் வெற்றிகரமான கல்வி மையங்கள், பல்கலைக்கழகங்களின் தலைவர்கள். இரு நண்பர்கள் மருத்துவமனை உரிமையாளர்கள். ஈழத்தில் பள்ளிகள், பொலிடெக்னிக்குகள், தாதிகள் கல்லூரிகள், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் நிறுவுவதைப்பற்றி யோசிக்குமாறு அவர்களுக்குப் பரிந்துரை செய்தேன். தங்கள் தாய்நாட்டின் மேம்பாட்டுக்காகப் பங்களிக்கவேண்டும் என்பதில் புலம்பெயர் நண்பர்கள் ஆர்வமாக இருப்பதாகவும், இதில் இந்தியாவையும் பங்களிக்கச் செய்யலாம் என்றும் ஐ. நா போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து நிதி உதவி பெறலாம் என்றும் கூறினேன். எல்லாருமே ஆர்வமாக இருந்தார்கள். அதன்பின்னால் வியாபார நோக்கம் இருக்கவில்லை. ஈழத்து சகோதர சகோதரிகள்மீது அவர்களுக்கு உண்மையான அன்பும் அக்கறையும் இருந்தது. போரால் சீர்குலைந்த மக்களுக்குக் கல்வி தருவதே அவர்களின் நீண்டகால சமூக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் உறுதியாக நம்பினார்கள். போருக்குப் பின்னால் கொத்தனார், ப்ளம்பர், தச்சர், பெயிண்டர், மெக்கானிக்குகள், கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், மருத்துவ பணியாளர்கள்போன்ற தளங்களில் திறமையான ஆட்கள் பெருமளவில் குறைந்துபோயினர். அந்த சூழலில் தமிழ்நாட்டிலிருந்து வரும் தொழில்முனைவோரால் கல்வி மற்றும் பயிற்சி மையங்கள் திறக்கப்பட்டிருந்தால் ஈழத்து மக்களுக்கு அது பெரும் உதவியாக இருந்திருக்கும்.*

*ஆனால், என் புலம்பெயர் நண்பர்களின் உற்சாகம் வடிந்து போனது. போருக்குப் பிந்தைய தமிழ் அரசியலில் வேறு சில விஷயங்களில் அவர்கள் ஆர்வம் காட்டினர். உங்களுக்கு எல்லாம் தெரிந்ததுதான், அதைச் சொல்லி நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால், என்னைவிட உங்களுக்கு இதுபற்றி நிறையவே தெரியும்.*


*கடந்தகாலம் கவலையளிக்கிறது என்றால் நிகழ்காலம் அதைவிட மோசம். பொருளாதார ரீதியில் நாம் பலவீனமாக இருக்கிறோம், நாம் ஒரு சமூகமாக பிளவுபட்டிருக்கிறோம். நமது அரசியல்வாதிகளில் பலர் சுயநலமிக்க ஊழல்வாதிகளாக இருக்கிறார்கள். இந்த சூழலில் சீன சாம்ராஜ்யம் தனது திட்டங்களுக்கு இலக்காக நம்மைக் குறிவைக்கிறது.*

*இப்போது மீண்டும் ஒரு மீனவர்களின் பிரச்னை வந்திருக்கிறது. அக்டோபர் 18ஆம் திகதி தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகு தென் தமிழகத்துக்கும் வட இலங்கைக்கும் நடுவில் உள்ள பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தது. அப்போது இலங்கை கடற்படையின் ரோந்துப் படகு மோதியதில் அவர் மூழ்கிவிட்டார், படகில் இருந்த இரு மீனவர்கள் கைது செய்யப்பட்டனர், படகு கடலில் கவிழ்ந்தது. மறுநாள் அவரது உடலை இலங்கை கடற்படை மீட்டெடுத்தது. இந்த நிகழ்வைப் பற்றி தமிழகத்தின் பல அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துவருகிறார்கள். இலங்கை கடற்பகுதிக்குள் அவர்கள் மீன்பிடித்ததாக கொழும்பு குற்றம் சாட்டுகிறது. தமிழக அரசியல்வாதிகளும் மீனவர்களும் தாங்கள் இந்திய எல்லைப்பகுதிக்குள் இருந்ததாகத் தெரிவிக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் சமீபத்தில் அதிகமாக நடக்கின்றன. இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த மீனவ சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, கடல்வளங்களை சரியாகப் பகிர்ந்துகொள்வது, தடைசெய்யப்பட்ட இழுவலைகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற விதியைக் கடுமையாகப் பின்பற்றுவது ஆகியவற்றைப்பற்றி ஓர் ஒப்பந்தத்துக்கு வராவிட்டால் இந்த சண்டைகள் அதிகரிக்கவே செய்யும்.*

*அதற்கு முன்னால் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும் சாணக்கியன் ராஜமாணிக்கமும் சிறீதரனும் சேர்ந்து யாழ்ப்பாண கடற்கரையில் பாக் ஜலசந்தியை ஒட்டிய பகுதிகளில் ஒரு கறுப்புக் கொடி போராட்டத்தை நடத்தினர். தமிழக மீனவர்கள் தங்களது கடல்வளங்களை சுரண்டுவதை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம் இது. மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு, 2017 சட்டப்படி இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வரும் மீனவர்களைத் தடுக்கவேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்காக இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக சுமந்திரன் அறிவித்தார். இதற்கு பதிலளித்த டக்ளஸ், போராட்டக்காரர்களின் இலக்கு இந்தியாதான் என்றும், போராட்டம் தன்னை நோக்கியது அல்ல என்றும் கூறினார். இது உண்மையானால், யாழ் மீனவர்களின் கறுப்புக்கொடி, இலங்கையின்மீதான இந்திய ராஜதந்திரம் சறுக்கிக்கொண்டு இருப்பதை இந்திய வெளியுறவுத் துறைக்கு உறுத்தக்கூடும். தென் தமிழகக் கடற்கரையிலிருந்து ஒரு மணிநேர படகுப் பயணத்தின் தொலைவில் இருக்கும் ஒரு நாட்டில் தமிழர்களின் ஆதரவை டெல்லி இழந்துகொண்டிருப்பதை அந்தக் கறுப்புக் கொடிகள் கூறியிருக்ககூடும்.*

*தங்களது வேற்றுமைகளைப் பற்றி இருநாட்டு மீனவர்கள் சங்கங்களும் பேசி முடிவெடுக்கவேண்டும் என்று ஏன் கூறினேன்? ஏன் நான் அரசியல் தலைவர்கள் பேசவேண்டும் என்று சொல்லவில்லை? தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளால் இதுபோன்ற பேச்சுவார்த்தைகளைத் தோல்வியடையச் செய்த பல அரசியல்வாதிகளின் கதைகள் எனக்குத் தெரியும். இப்போது அது பற்றிப் பேசவேண்டாம், பின்னால் ஏதாவது ஒரு தருணத்தில் அதைப் பகிர்ந்து கொள்கிறேன்.* ●

## அறிவியல் வளத்தில் நாம் இணைந்து முயல்வோம்!



# அமெரிக்கா, இந்தியாவால் அரண் அமைக்கப்பட்ட இலங்கை



பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்

தென்னிலங்கை அரசாங்கம் உள்நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. அவ்வாறே விலையேற்றமும் சம்பள உயர்வு பற்றிய சச்சரவுகளும் தீர்வின்றி நீடித்தவையாகக் காணப்படுகின்றன. ஆனால், கடந்த பல மாதங்களாக பிராந்திய அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் அதிக முரண்பாட்டை எதிர்கொண்ட இலங்கை அதற்கான தீர்வை எட்டியுள்ளது. குறிப்பாக, அமெரிக்காவாலும் இந்தியாவாலும் அதிக அதிருப்தியை அனுபவித்த ராஜபக்ஷக்களின் அரசாங்கம் அதிலிருந்து மீண்டு ஆரோக்கியமான சூழலுக்கு நகர்ந்திருப்பது சமகால நிகழ்வுகள் - பதிவுகளாக வெளிவருகின்றன. இந்தக் கட்டுரையும் இந்தியாவாலும் அமெரிக்காவாலும் அரண் அமைக்கப்பட்ட இலங்கை என்பதை அடையாளப்படுத்துவதாக உள்ளது.

முதலாவது, இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங் தெரிவித்துள்ள கருத்துக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதோர் அம்சமாகும். அவர் அண்மையில் செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவின் முன் கருத்து வெளியிடுகையில் பின்வரும் விடயங்களை முதன்மைப்படுத்தியிருந்தார்.

ஒன்று, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் என்ற அடிப் படையில் அமெரிக்காவும் இலங்கையும் வலுவான பங்காளிகளாக செயற்பட வேண்டுமென தெரிவித்தார்.

இரண்டு, இலங்கை இந்து சமுத்திரத்தின் இதயத்தில் உள்ளது. அது மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள் ளது. உலகளாவிய கடற்பாதை கள் மற்றும் வர்த்தக வழிதடங் களை கொண்டுள்ள முக்கிய துறை முகங்கள் சுதந்திரமான வெளிப் படையான இந்தோ - பசுபிக்குக்கு மிக அவசியமானதாகும். இது அமெரிக்காவின் சிவில் சமூ கங்களை, தனியார் துறையினரை உள்ளடக்கி பொது மக்களுட னான இலங்கையுடன் ஆக்கபூர்வ மான உறவை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

மூன்று, பேண்தகு சூழல் மற் றும் தொழிலாளர் தராதரங்களை கருத்தில் கொள்ளும் வெளிப்படை தன்மை, சர்வதேச சட்டத்துக் கான மதிப்பு, நல்லாட்சி ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட உட்கட்டமைப்பு முதலீடுகளை ஊக்குவிக்க அமெரிக்கா முயல் தல் அவசியம்.

நான்கு, இலங்கையின் வர்த்தகத்தில் ஈடுபடும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அரசாங்கம் வரிச்சலுகைகளை வழங்க வேண்டும். இது வலுக்கட்டாயமாக கடன் வழங்குவதையும், இரகசிய ஒப்பீட்டுகளுக்கான மாற்றீடுகளை உருவாக்கு வதோடு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாப னம் மற்றும் ஏற்றுமதி - இறக்குமதி, வங்கி போன்றவற்றின் மூலம் அமெரிக்கா தன்னிடமுள்ள சாதனங்களை பயன்படுத்த வேண்டும்.

ஐந்து, கடல்சார் அழிவுகளையும் அதன் தராதரங்களையும் பேண வேண்டியதன் அவசியத்தையும் அமெரிக்கா உணர்ந்திருப்பதோடு கொழும்பு துறைமுகத்தின் அருகில் அண்மையில் நிகழ்ந்த பேர்ள் கப்பலின் விளைவுகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆறு, அமெரிக்காவின் மனிதாபிமான உதவி அவசர சூழ்நிலைகளில் நடவடிக்கைகளை எடுப்பதற்கான திறன் மற்றும் அதன் சுற்றுச்சூழல் கண்காணிப்பு சாதனம் அத்தகைய நெருக்கடியிலிருந்து இலங்கையை பாதுகாப்பதற்கு அவசியமாகும்.

ஏழு, இலங்கை ஆசியாவிலேயே பழமையான ஜனநாயக நாடு. நினைத்து பார்க்க முடியாத வன்முறைகள் மத, இன ரீதியான பிளவுகளை எதிர்கொண்டு உள்நாட்டு யுத்தத்தின் துயரத்திலிருந்து மீண்ட நாடு.

என்று குறிப்பிட்டதோடு ஜூலி சங் தனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டால் ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள் மற்றும் வலுவான சிவில் சமூகத்துக்கான ஆதரவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் பாதுகாப்பதற்கு தாம் குரல் கொடுப்பது என்றும், ஜனநாயகமே அமெரிக்காவின் வெளிவிவகார அணுகுமுறையின் மையம் - என்றார். இதனோடு இரு தரப்பு உறவுகளுக்கு மிகவும் பெறுமதியான பங்களிப்பை வழங்கும் அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களுடன் நாம் தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



இரண்டாவது, புத்த பெருமான் பரிநிர்வாணமடைந்த குஷி நகரில் அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்திற்கு முதலில் விஜயத்தை மேற்கொண்ட இலங்கை குழுவினர் இந்தியாவுடனான மத ரீதியிலான உறவை பலப்படுத்தும் விதத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஒன்று, புத்தபகவானின் புனித கபிலவஷ்து சின்னங்களை பாதுகாத்துவரும் மகா விகாரையின் பிரதம குருவான சங்கைக்குரிய வன்சன மஹிந்த வன்சநாயக்க தேரர் அந்தப் புனித சின்னங்களை குஷிநகருக்கு எடுத்து சென்றுள்ளார். அதற்கான இந்திய அரசாங் கத்தின் முழுமையான அரச கௌரவம் வழங்கப்பட்டதோடு குஷிநகர் மற்றும் சாரநாத் உட் பட்ட பல இந்திய நகரங்களில் அவை காட்சிப்படுத்த உள்ளதாகவும் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இரண்டு, இந்தியாவின் பௌத்த வளாகத்தின் மையப்புள்ளியான குஷி நகர் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான மக்கள் தொடர்புகளை மேலும் பலப்படுத்துமென இந்திய தரப்பு அறிவித்துள்ளது. இது இந்திய - இலங்கை மக்களுக்கிடையிலான உறவை பலப்படுத்தும் ஒரு பணியென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று, இரு அயல் நாடுகளுக்கும் இடையிலான ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான நாகரிக உறவுகளையும் இரு தரப்பு உறவின் கலாசார ஆத்மீக மற்றும் மொழியியல் பிணைப்புகளுக்கு பௌத்த மதம் மையமானதென இந்திய தரப்பு குறிப்பிட்டுள்ளது.

நான்கு, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கிடைத்த மிக உயரிய பரிசு பௌத்தம் என இலங்கைக்கான தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிய விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி பெயர்ப்பை கொண்ட பகவத் கீதையின் முதல் பிரதியை நாமல் ராஜபக்ஷ பரிசாக வழங்கினார்.

ஐந்து, இலங்கை தூதுக்குழு குஷி நகருக்கு எடுத்துச்சென்ற மிகப்பிரதான பண்பாட்டு சின்னங்களாக இலங்கையின் புகழ்பெற்ற ஓவியர் சோலியாஸ் மெண்டிஸ் வரைந்த அசோகரின் மகன் அரஹத் பிக்கு மஹிந்த புத்தரின் செய்தியை இலங்கையின் மன்னர் தேவநம்பிய தீசனுக்கு வழங்குவதை சித்தரிக்கும் சுவரோவியமும், புத்தர் ஞானம் பெற்றதாக நம்பப்படும் புனித போதி மரத்தின் மரக்கன்றை தாங்கி அசோகரின் மகள் தெறி பிக்குணி சங்கமித்தவின் இலங்கை வருகையை காட்டும் மற்றோர் சுவரோவியமும் இந்தியாவிற்கு களனி ராஜமகா விகரையில் அன்பளிப்பாக வழங்கப்படுமென இந்தியாவிற்கான இலங்கை தூதரகம் தி இந்துவிற்கு தெரிவித்தள்ளது.



எனவே, மேற்குறித்த இரு தேசங்களும் இலங்கையுடனான உறவை பலப்படுத்துவதில் பரஸ்பரம் இரு தரப்புக்களும் ஒன்றிணைகின்றன. இதற்கான அடிப்படை ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டம் என்பதே துயரமான செய்தியாகும். இலங்கை அண்மையில் எதிர்கொண்ட அனைத்து பிராந்திய சர்வதேச நெருக்கடிகளையும் சரிசெய்வதில் வெற்றி கண்டுள்ளது. அமெரிக்காவும் இந்தோ - பசுபிக் உபாயத்தில் இலங்கையை ஈர்க்கும் விதத்தில் இராஜீக நகர்வுகளை முன்னிறுத்தி இலங்கை துறைமுகங்களோடு நெருக்கமான உறவை வகுத்துள்ளது.

இந்தோ-பசுபிக்கின் முக்கியமான நிலையமாக இலங்கையை மாற்றுவதில் அமெரிக்காவிற்கு உள்ள விருப்பத்தை ஜூலி சங் வெளிப்படுத்தியுள்ளார். எனவே, அமெரிக்கா இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் ஏற்படக்கூடிய அனைத்து நெருக்கடிகளையும் அரசாங்கம் எதிர்கொள்ளக்கூடிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க தயாராக உள்ளதெனவும் ஜூலி சங் தனது செய்தியில் வெளிப்படுத்தியுள்ளார். தென்னிலங்கையின் ஆட்சியை பாதுகாப்பது பேணுவது பராமரிப்பதிலும் அமெரிக்கர்களுக்கு அதிக பங்குண்டது என்பதனை ஜூலி சங்கின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன.

அவ்வாறானதொரு கோணத்திலேயே குஷி நகர் சர்வதேச விமான நிலையத்தினது நிகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சீன எதிர்ப்பு வாதத்தை முன்னிறுத்திய இந்தியா இலங்கையின் விட்டுக்கொடுப்புகளாலும் அணுகுமுறையாலும் இலங்கை - இந்தியா நட்புறவாக ஒன்றிணைவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. அதனடிப்படையிலேயே இலங்கை - இந்திய உறவு இந்தோ - பசுபிக் உபாயத்துக்குள்ளும் தனித்துவ அடையாளத்துக்குள்ளும் இயங்க ஆரம்பித்துள்ளது. இத்தகைய உறவின் மூலாதாரம் பௌத்த கலாசாரமாகும். பௌத்த கலாசாரத்தை முன்னிறுத்தி இலங்கை - இந்திய உறவை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பலப்படுத்தி உள்ளனர்.

எனவே, தென்னிலங்கையின் ஆட்சியானது, இந்தியாவாலும் அமெரிக்காவாலும் பாதுகாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய உறவு நிலையை பலப்படுத்தியது இலங்கையின் இராஜதந்திரிகளின் முனைப்பான நடவடிக்கைகளே. ஈழத் தமிழர் தமது பலவீனமான அரசியலால் அனைத்து வாய்ப்புக்களையும் இழப்பதோடு மட்டுமன்றி பிராந்திய - சர்வதேச சக்திகளின் முதலீட்டு இனமாக மாறிவருகிறது. ■

-நன்றி - அருவி



“தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் அதிகாரத்துக்கு வந்ததை இந்தியாவில் உள்ள தீவீரவாத முஸ்லிம் குழுக்கள் மற்றும் அரசியல் குழுக்கள் வரவேற்கின்றன. அதன் உளவியல் தாக்கங்களின் விளைவாக இந்தியாவில் உள்ள தீவிரவாத குழுக்களுக்கு ஊக்கம் கிடைக்கப்போகின்றது.

## இந்திய அரசியல் ஆய்வாளர் கல்பூஷண் வாரிக்கூ நேர்காணல்

# தலிபான்களுக்கு அங்கீகாரம் கிடைத்தால் தெற்காசியாவில் பெரும் தாக்கம் ஏற்படும்

ஏ. யதீந்திரா

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமானால் தெற்காசிய சமுதாயத்திலும் அரசியலிலும் பெரும் தாக்கம் ஏற்படும். தெற்காசிய நாடுகளில் உள்ள முஸ்லிம் சனத்தொகை தலிபான்களின் தீவிரவாத அரசியல் சிந்தனைகளினால் எடுபடக்கூடிய சாத்தியமும் இருக்கிறது என்று இந்திய அரசியல் ஆய்வாளரும் கல்விமானுமான கல்பூஷண் வாரிக்கூ கூறியிருக்கிறார். புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச கற்கைகளுக்கான கல்லூரியில், மத்திய ஆசிய செயற்திட்டத்தில் கடந்த 25 வருடங்களாக பணியாற்றிவரும் வாரிக்கூ, வழங்கிய அந்த நேர்காணலை கேள்வி பதில் வடிவில் இங்கே தருகிறோம்.

**கேள்வி:** உலக அரசியலில் ஆப்கானிஸ்தான் மீண்டும் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்திருக்கிறது. அமெரிக்கப் படைகளின் வெளி யேற்றத்தை அடுத்து உடனடியாகவே தலிபான்கள் அதிகாரத்தை கைப் பற்றியிருக்கிறார்கள். இது எவ்வாறு நடந்தது. கடந்த இருபது வருட காலத்திலும் தலிபான்களினால் எவ்வாறு தாக்குப்பிடிக்க முடிந்தது? எல்லாவற்றுக்கும் மேலாக - ஒரு பின்தளம் இல்லாமல் இது சாத்தியமாகியிருக்க முடியாதே. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் ?

**பதில்:** தலிபான்கள் ஏற்கெனவே ஆப்கானிஸ்தானில் இருந்தார்கள். பாகிஸ்தானிடமிருந்து கிடைத்த வெளிப்படையான ஆதரவைப் பயன்படுத்தி அவர்கள் தங்களது நிலையை வலுப்படுத்திக்கொண்டார்கள். அத்துடன் தலிபான்க ளுடன் இணக்கப்பாடு இல்லாவிட்டாலும் அவர்களுக்கு உடந்தையாக அமெரிக்காவும் செயற்பட்டது. ரஷ்யர்களை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்று வதற்காக தீவிரவாத இஸ்லாமிய முஜாஹிதீன்களுக்கு ஆயுதங்களை பெருமளவில் வழங்கியதன் மூலம் தாங்களாக சில தசாப்தங்களுக்கு முன்னர் உருவாக்கிய சிக்கலில் இருந்து விடுபட்டுக்கொள்வதற்காக அமெரிக்கர்கள் இவ்வாறு நடந்துகொண்டார்கள்.

ரஷ்யர்களை வெளியேற்றும் இலக்கை அமெரிக்கர்கள் சாதித்தார்கள். ஆனால், முஜாஹிதீன்களை நிராயுதபாணிகளாக்கவேண்டும் என்று அவர்கள் அக்கறைப் படவில்லை. ரஷ்யர்கள் வெளியேறிய உடனடியாகவே முஜாஹிதீன்கள் நாட்டை உள்நாட்டு யுத்தத்திற்குள் தள்ளினார்கள். அண்மையில் அமெரிக்கர்கள் அவசர, அவசரமாக வெளியேறியபோது, கூடவே, கோடிக்கணக்கான டொலர்கள் பெறுமதியான நவீன ஆயுதங்களையும் சுடுகலன்களையும் போர்விமானங்களையும் ஹெலிகெப்டர்களையும் விட்டுச்சென்றார்கள். அவையெல்லாம் இப்போது தலிபான்களின் கைகளில் இருக்கின்றன. அமெரிக்கர்களின் இலக்கு ரஷ்யர்களும் சீனர்களுமே என்பதை எம்மால் பார்க்க முடிகிறது. இதனால் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவுக்கு பெரும்பாதிப்பு ஏற்படப் போகிறது.

**கேள்வி:** தலிபான்களின் மீள் எழுச்சி உலகம் பூராவு முள்ள நாடுகடந்த ஜிஹாதிகள் மத்தியில் பெரும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக அல்-ஹயெடாவின் மீள் எழுச்சிக்கு இது வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. ஆப்கானிஸ்தானின் 34 மாகாணங்களில் குறைந்தபட்சம் 15மாகாணங்களில் அல்-ஹயெடா சுறு சுறுபாக இயங்குகிறது எனறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கூறியிருக்கிறது. அதேவேளை, அமெரிக்காவினால் வெளிநாட்டு பயங்கரவாத இயக்கம் என்று தடைசெய்யப்பட் டிருக்கும் ஹக்கானி இயக் கம் தலிபான்களின் ஒரு அங்கமாக இருப்பதுடன் 1980 களிலிருந்து அல்-ஹயெடாவின் நெருங்கிய நேச அணியாகவும் விளங்கிவருகிறது. சிலர் இதை தலிபான் - 2 என்றும் குறிப்பிடுகிறார்கள். ஆனால் நிலைமை அவ்வாறானதாக இல்லை. தலிபான் களின் எழுச்சியையும் உலகளாவிய ஜிஹாதி கிளர்ச்சி யையும் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**பதில்:** தீவிரவாத தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் அதிகாரத்துக்கு வந்ததை இந்தியாவில் உள்ள தீவீரவாத முஸ்லிம் குழுக்கள் மற்றும் அரசியல் குழுக்கள் வரவேற்கின்றன. அதன் உளவியல் தாக்கங்களின் விளைவாக இந்தியாவில் உள்ள தீவிரவாத குழுக்களுக்கு ஊக்கம் கிடைக்கப்போகின்றது. ஐ.எஸ்.ஐ. எஸ் மற்றும் அல்-ஹயெடா உட்பட, இஸ்லாமிய தீவிரவாதிகள் தங்களது நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்த ஊக்கம் பெறு வார்கள்.

ஐரோப்பா, அமெரிக்கா உட்பட இஸ்லாமியர்கள் இல்லாத நாடுகளிலும் அதை அவர்கள் செய்யப்பார்ப் பார்கள். ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் இஸ்லாமிய எழுச்சி காணப்படுகிறது. பழைய தேவாலயங் கள் விற்பனை செய்யப்பட்டு பள்ளிவாசல்களாக் கப்படுகின்றன.

**கேள்வி:** தலிபான்களின் மீள் எழுச்சி குறித்து பாகிஸ்தான் பரவசமடைந்திருப்பது போலத் தோன்றுகிறது. இது காஷ்மீரில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் ஆதரவு இஸ்லாமிய பயங்கரவாத குழுக்கள் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்துவருகின்றன. காஷ்மீரிலும் வேறெங்குமுள்ள முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கும் உரிமை தங்களுக்கு இருப்பதாக தலிபான்கள் கூறியிருக்கிறார்கள். பயங்கரவாத பின்னணியில் தலிபான்கள் இந்திய தேசிய பாதுகாப்பு மீது எவ்வாறு தாக்கத்தைச் செலுத்துவார்கள்?

**பதில்:** பாகிஸ்தானைப் பொறுத்தவரை அதற்கு அடிபணிந்து செயற்படக்கூடிய அரசாங்கம் ஒன்று ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக தலிபான்களை ஊக்குவித்து வளர்த்தது. பிராந்தியத்தில் பாகிஸ்தானின் நீண்டகால மூலோபாய இலக்குகளை பூர்த்தி செய்வதற்காகவும், இந்தியாவின் செல்வாக்கை முறியடிப்பதற்காகவும் அவ்வாறு செய்யப்படுகிறது. அதேவேளை, காஷ்மீரில் பயங்கரவாத நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுகின்ற லஷ்கர் ஈ தைபா மற்றும் ஜாய்ஷ் ஈ முஹமட் போன்ற பயங்கரவாத அமைப்புக்களை பாகிஸ்தான் இயக்குகிறது. கடந்த சில நாட்களாக காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டை கடப்பதற்கு இந்த பயங்கரவாத அமைப்புகளால் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்திய படைகளுடனான மோதல்களின்போது பாகிஸ்தான் குடியுரிமையைக் கொண்ட பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெருமளவு ஆயுதங்களும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. காஷ்மீருக்குள் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை அனுப்ப பாகிஸ்தான் கடுமையாக கஷ்டப்படுகிறது. ஏனென்றால் கடந்த பதினெட்டு மாதங்களாக காஷ்மீரில் உள்ளூர் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளில் ஒரு வீழ்ச்சி காணப்படுகிறது.

**கேள்வி:** தலிபான்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் பொதுவில் தெற்காசியாவில் அரசியல் ஒழுங்கில் எத்தகைய தாக்கம் ஏற்படும்?

**பதில்:** தலிபான்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமானால் அவர்களின் மீள்வருகை தெற்காசிய சமுதாயத்திலும் அரசியலிலும் தாக்கம் ஏற்படும். மேலும் பொதுவில் தெற்காசியாவில் உள்ள முஸ்லிம் சனத்தொகை தலிபான்களின் தீவிரவாத மற்றும் அரசியல் சிந்தனைகளினால் எடுபடக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

**கேள்வி:** தலிபான்--சீன தேனிலவொன்று சாத்தியமா? உண்மையில் தலிபான்களுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதில் சீனா அக்கறை கொண்டிப்பது போலத்தோன்றுகிறது. சின்ஜியாங் மாகாணத்தில் முஸ்லிம் உய்குர் கிளர்ச்சியாளர்களுடன் இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்காக தலிபான்களுடன் உடன்படிக்கையொன்றை சீனா எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் சீனா முன்னர் சுதந்திரமாக செயற்படமுடியவில்லை. ஏனென்றால் அமெரிக்கா அங்கே இருந்தது. ஆனால் இப்போது சீனாவுக்கு கதவு திறந்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், சீன சதுரங்க ஆட்டத்தை எவ்வாறு நோக்குகிறீர்கள்?

**பதில்:** ஆப்கானிஸ்தானில் இருந்து உய்குர் தீவிரவாதிகளை வெளியேற்றியதன் மூலம் தலிபான்கள் ஏற்கெனவே சீனாவுக்கான தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எந்தவொரு உய்குர் பயங்கரவாத நடவடிக்கையையும் தடுப்பதற்காக சின்ஜியாங்கில் சீனா கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஆப்கானிஸ்தானில் உள்ள கனிம வளங்கள் மீது சீனா கண்வைத்திருக்கிறது. அத்துடன் சீன ஜனாதிபதியின் பேரார்வம் மிக்க ‘மண்டலமும் பாதையும்’ செயற்திட்டத்திற்கு ஆப்கானிஸ்தானையும் சேர்த்துக்கொள்ள பெய்ஜிங் முயற்சிக்கும்.

**கேள்வி:** “வடகிழக்கு இந்தியாவில் பயங்கரவாதத்தின் பின்னணியில் சீனாவின் கரங்கள்” என்ற ஒரு அறிக்கையை விவேகானந்தா சர்வதேச பவுண்டேசன் வெளியிட்டிருக்கிறது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பகைமை எல்லையிலும் வேறு துறைகளிலும் கூர்மையடைகின்றது என்று அந்த அறிக்கை கூறியிருக்கிறது. அத்தகைய சூழ்நிலையில் பாரம்பரிய மற்றதும் மறைமுகமானதுமான நடவடிக்கைகளில் சீனா இறங்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தலிபான்களின் மீள்வருகை இந்தியாவில் எல்லை கடந்த பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** சீனா வடகிழக்கு இந்தியாவில் பிரிவினைவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்து ஊக்குவிக்கின்றன. மத்திய இந்தியாவில் நக்சலைட்டுக்களையும் தேசவிரோதிகளையும் ஆதரித்து சீனாவையும் பாகிஸ்தானையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் பிரசாரங்களை மேற்கொள்கிறார்கள். ■





# உலகின் உயரமான மலை ஹவாய் தீவில்தான் இருக்கிறது என்றால் நம்புவீர்களா?

குரு அரவிந்தன்

‘உலகிலே அதி உயரமான மலையின் உச்சியில் இப்போது நீங்கள் நிற்கிறீர்கள்’ என்று சொல்லி எனக்கு அதிர்ச்சி தந்தாள் வரவேற்பில் நின்ற, தலைமுடியில் ஒற்றைப்பூ செருகிய இளம் பெண்மணி. ஹவாயில் உள்ள மௌனாகியா மலையின் உச்சியில் நாங்கள் அப்போது நின்றிருந்தோம். இமயமலை ஆசியாவில்தான் இருக்கிறது என்ற எனது நம்பிக்கையை ஒரு கணம் கேள்விக் குறியாக்கினாள். நேபாளத்திற்கும், தீபெத்திற்கும் இடையே உள்ள இமயமலையின் எவரெஸ்ட் சிகரம் தான் உலகிலே அதிக உயரமான சிகரம் என்பதும், அதன் உயரம் **29,028** அடி என்பதும் மாணவப்பருவத்தில் இருந்தே என் மனதில் பதிந்திருந்தது. அதன்பின் இன்றுவரை இமயமலை **4** அங்குலம் வளர்ந்திருந்ததும் தெரியும். வரவேற்பில் நின்ற பெண்மணிக்கு அனுபவம் போதவில்லை, எவெரெஸ்ட் பற்றி இவர் அறிந்திருக்கவில்லை என்ற நினைவோடு, அவரைப் பார்த்தேன். எனது பார்வையைப் புரிந்து கொண்ட அவரோ அருகே இருந்த பதாதையை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டினார். மௌனாகியா மலையின் படத்தையும் அதைப்பற்றிய குறிப்பையும் வாசித்த போது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் ஒருகணம் தடுமாறிப் போனேன்.

ஹவாய் தீவுகளில் ஒன்றான பிக்ஐலண்டில் உள்ள மௌனாகியா மலையில் மிகப்பெரிய தொலை நோக்கிகள் இருப்பதாக ஏற்கனவே படித்திருந்தேன். கண்ணுக்குத் தெரியாத, எத்தனையோ ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள கருந்துளைகளைக் கண்டறிவதற்கும், சமீபத்தில் வியாழனைவிடப் பெரிய கிரகம் ஒன்று **6500** ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருப்பதையும் இந்தத் தொலைநோக்கிகள் தான் கண்டுபிடித்திருந்தன. எனவே ஒரு நாள் அதற்காக நேரத்தை ஒதுக்கி அங்கு சென்று பார்த்தோம். சுமார் பதின்மூன்று பிரமாண்டமான தொலைநோக்கி நிலையங்கள் இங்கே இருக்கின்றன. தொலைநோக்கி நிலையத்தில் நின்றபோது எங்களோடு உரையாடிய பெண்மணி அதைப்பற்றி விளக்கம் தந்த போது எனக்கு உடம்பு சிலிர்த்தது. அவர் சொன்னது உண்மைதான், அதாவது மௌனாகியா மலையின் உயரம் **33,480** அடிகள் என்று அங்கே பதியப்பட்டிருந்தது. எவெரெஸ்ட் உச்சியை விட சுமார் **4000** அடிகள் மேலே உலகத்தின் உச்சியில் நிற்கிறோம் என்று பெருமையாக மனைவியிடம் சொன்னேன். மனைவிக்கு அதில் நம்பிக்கை ஏற்படவில்லை. ‘இவ்வளவு சுலபமாக உலகத்தின் உச்சியைத் தொட முடியமா, எத்தனை பேர் எவெரெஸ்டில் ஏறமுடியாமல் திரும்பி இருக்கிறார்கள் தெரியுமா?’ என்றார். எனக்கும் அதில் சந்தேகம் இருந்தது. பிரமனும் திருமாலும் அடி முடி தேடியகதை போல நானும் எது சரி என்பதை கண்டறிவதற்காகக் கணனியில் தேடிப் பார்த்தபோது இந்தத் தகவல் கிடைத்தது. Most of the mountain is under water; when measured from its oceanic base, Mauna Kea is over 33,480 ft tall and is the tallest mountain on Earth. தண்ணீருக்கு அடியில் இருந்தாலும், ஹவாயில் இருப்பவர்கள் மௌனாகியா மலைதான் உலகத்திலே உயரமானது என்பதை எந்தக் காரணம் கொண்டும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.



எரிமலையான மௌனாகியாவின் உச்சியில், கடல் மட்டத்தில் இருந்து **13,803** அடி உயரத்தில் இந்த தொலைநோக்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒழுங்கு செய்திருந்த வண்டியில்தான் மேலே செல்ல முடிந்தது. சாதாரண வண்டிகள் அந்தப் பாதையில் செல்வது கடினமானது. அவர்கள் குறிப்பிட்ட தரிப்பிடத்தில் எங்கள் வண்டியை நிறுத்தி விட்டு அவர்கள் ஒழுங்கு செய்த வண்டியில் மேலே சென்றோம். இந்த இடத்திற்குச் செல்வது என்பது மலையைச் சுற்றிச் சுற்றி மேலே செல்வதைப் போன்றது. இந்த மலையை



மௌனா ஓ வாக்கியா (Mauna O Wakea-the mountain of the god Wakea) என்றும் பழங்குடி மக்கள் அழைக்கின்றார்கள். இது ஹவாய் பழங்குடி மக்களின் புனிதமான இடமாகையால் அவர்களின் வழிபாட்டுச் சின்னங்களையும் காணமுடிந்தது. நெடுஞ்சாலையின் இரண்டு பக்கமும் எரிமலை லாவாக் குளம்புகள் இறுகியதால் ஏற்பட்ட கறுப்பு நிறப் பாறைகளையும், கற்களையும் காணமுடிந்தது. இங்குள்ள ஜெமினி நோர்த், ஜேம்ஸ் கிளார்க் மக்ஸ்வெல், கனடா-பிரான்ஸ் தொலைநோக்கி போன்ற தொலைநோக்கிகளில் கனடாவின் பங்கும் கணிசமானளவு இருக்கின்றது.

திரும்பி வரும்போது, பார்வையாளர்களுக்கான தகவல் பரிமாற்ற நிலையத்திற்குச் (The Onizuka Center for International Astronomy Visitor Information Station) சென்றோம். இங்கிருந்து வானத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்காக ஏனைய விளக்கு வெளிச்சங்களைத் தடை செய்திருக்கின்றார்கள். தரையில் மட்டும் ஆங்காங்கே சிறிய சிகப்பு விளக்குகள் பொருத்தியிருப்பதால் அந்த வெளிச்சத்தைக் கொண்டுதான் நாங்கள் நகர வேண்டி இருந்தது. நாங்கள் பாதையை இனம் காண்பதற்காக செல்போன் வெளிச்சத்தைப் பாவித்தோம். உயரச் செல்லும்போது பிராணவாயு குறைவாக இருப்பதால், முதியோருக்கு ஏறிச் செல்லும் போது, சுவாசிப்பது சற்று கடினமாக இருக்கலாம். இரவுதான் இங்கே நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கின்றன. சிறியதொரு உணவகமும் அங்கே உண்டு. அங்கே கடமையில் இருந்த ஒரு பெண்மணி தன்னிடம் இருந்த நீலநிற ஒளிபாய்ச்சும் அதிசக்தி வாய்ந்த லேசர்கதிர் விளக்கைப் பாவித்து வானத்தில் தெரிந்த ஒவ்வொரு நட்சத்திரங்களைப் பற்றியும் விளக்கம் தந்தார். அங்கே இருள் சூழ்ந்து இருந்ததால் வானத்து நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரிந்தன. லேசர் கதிர் விளக்கால் வானத்தைச் சுட்டிக்காட்டி ‘அதோ அங்கே பாருங்கள் அதுதான் செவின்சிஸ்ரேஸ்!’ என்றார். தொலைநோக்கியால் பார்த்தபோது ஏழு பிரகாசமான நட்சத்திரங்கள் கூட்டமாக மிக அருகே தெரிந்தாலும் அவற்றைச் சுற்றிவர நிறைய புள்ளிகளாக நட்சத்திரங்கள் தெரிந்தன. எங்கள் கண் பார்வைக்கு அவை எல்லாம் ஒரே இடத்தில் இருப்பது போலத் தெரிந்தாலும் எத்தனையோ கோடி மைல்களுக்கப்பால் ஒவ்வொன்றும் தனித்தனியே இருந்தன.

இன்னும் ஒருநாள் கௌலா ரேஞ் என்ற இடத்திற்குச் சென்றிருந்தோம்.(Kualoa Ranch, on the Hawaiian island of Oahu) வண்டியில் ஏறுமுன் கூட்டமாக எல்லோரையும் படம் எடுத்தார்கள். ஐந்து வண்டிகளில் எல்லோரும் ஏறியதும் ஒன்றின் பின் ஒன்றாக வண்டிகள் புறப்பட்டு மலைப்பாதையில் சென்றன. நீண்ட காலத்தின் முன் அழிந்து போய்விட்டதாகச் சொல்லப்பட்ட டைனஸோக்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை அங்கே காண முடிந்தது. எப்படி என்று நினைக்கிறீர்களா? யுராசிக்பாக் என்ற பதாதை வாசலில் இருந்தது. இந்த உயரமான காட்டுப் பகுதியில்தான் ஸ்ரீவன் ஸ்பில்பேர்க்கின் நெறியாள்கையில் **1993** ஆம் ஆண்டு வெளிவந்த யுராசிக் பார்க் (Jurassic Park) படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் இடம் பெற்ற வாசல் கதவு, டைனஸோவின் நகக் கீறலுடன் கூடிய மதில் எல்லாம் அப்படியே இருக்கின்றன. டைனஸோவின் பெரியதொரு எலும்புக்கூட்டையும் பெரிதாக அங்கே வைத்திருந்தார்கள்.

மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. சற்றுத் தள்ளிக் காட்டுப் பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தரையில் உடைந்து விழுந்து கிடந்தது. அதற்கு அருகே கிங்கொங் படத்தில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் என்று அதைப் பற்றிய விபரங்கள் எழுதியிருந்தார்கள். wreckage of a military chopper in Kong: Skull Island movie அந்த இடத்திலும் இறங்கிப் படங்கள் எடுத்துக் கொண்டோம். ‘கொங்’ படத்திற்கான சில காட்சிகளின் படப்பிடிப்பு அங்கு நடைபெற்றதாக வழிகாட்டிப் பெண்மணி குறிப்பிட்டார். யுராசிக்வேள்ட், பேர்ள் ஹாபர், கொட்சிலா போன்ற படங்களையும் இங்கேதான் எடுத்தார்கள். சென்ற வருடம் வெளிவந்த ‘யுமாஞ்சி’ என்ற படமும் இங்கேதான் எடுத்தார்கள் என்பதால் அந்தப் படத்தையும் ஹவாய் திரையரங்கில் பார்த்து மகிழ்ந்தோம். இதைவிட சின்னத்திரை நாடகங்கள் போல, பிற மொழிகளில் பல படங்கள் இங்கே எடுத்திருக்கிறார்கள். அதிசயக்கத்தக்க தீவுகளாகக் ஹவாய் தீவுகள் இருக்கின்றன. ■



# பயணங்கள்! - மாலி - 7


யாழ். வைத்தியசாலை

# அமைதி; சமாதானம்; தீர்வு!

## விரக்தியுற்ற மக்களின் அபிலாஷை

கொழும்பிலிருந்து ஒரு பொருள் யாழ்ப்பாணத்தை வந்தடைவதிலுள்ள சிரமமும் செலவும் புரிந்துகொள்ளக்கூடியதே. அந்த விதத்தில், அப் பொருளின் விலை அமைகிறது. ஆனாலும், 'விற்பனை விலையில் 2 வீதம் உங்களுக்கு கிடைக்குமென்பதால், வர்த்தகர்கள் என்ன விலையிலும் விற்கலாம் அல்லவா? அத்துடன், 'செட்டி நட்டம் ஊர்மேலே' என்பதுபோல, அவர்களுக்குச் சில சமயங்களில் விதிக்கப்படும் அபராதங்களை ஈடுசெய்யவும் அவர்கள் பொருள்களின் விலைகளை அதிகரிக்கலாமல்லவா? இவற்றுக்காக, ஏன் ஒரு கட்டுப்பாட்டு விலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது' என்று புதுவை இரத்தினதுரையிடம் கேட்டபோது, பொருள்கள் தாராளமாக கிடைக்காதபோது கட்டுப்பாட்டு விலை சாத்தியமாகாது என்று விளக்கமளித்தார். 'இந்த தாராள நிலைமை அரிசி விற்பனையில் இருந்தது. தனியார் வியாபாரிகளிடம் அரிசி விற்பனை இருந்தபோது ஒரு கில்லோ அரிசியின் விலை 50 ரூபாவரை சென்றது. ஆனால், இப்போது அரிசி வியாபாரத்தை நாம் பொறுப்பேற்ற பின்னர் 28 ரூபா 50 சதத்துக்கு அரிசி கிடைக்கிறது. இதில் லாபமெதனையும் நாம் பெறவில்லை. ஆனால், வள்ளங்களில் குடாநாட்டுக்குள் கொண்டுவருவதில் ஏற்படும் தாமதம், மழையால் நெல்லைக் குற்றுவதில் ஏற்படும் தாமதம் போன்றவை சில சமயங்களில் தட்டுப்பாடு நிலவ காரணமாகிறது' என்றார்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்தாலும், கூலிவேலை செய்பவர்களின் வருமானம் உயர்ந்திருக்கிறது என்கிறார் அவர். சாதாரணமாக, கூலிவேலை செய்வோர் நாளொன்றுக்கு சாப்பாடுடன் 160 ரூபா அல்லது, சாப்பாடின்றி 200 ரூபா உழைக்கிறார்கள். 800 ரூபா வுக்கு சாராயம் அருந்து கிறார்கள். அதற்கு 100 வீதம் வரி அறவிடுகிறோம். நாளொன்றுக்கு 1000 ரூபா செலுத்தி வீடியோவில் படம் பார்க்கிறார்கள். ஆக, உள்ளூர் வருமானத்தில் தங்கியிருப்பவர்களுக்குத் தான் கஷ்டம் என்றும் புதுவை இரத்தினதுரை விளக்கினார்.

'இந்திய சினிமா, போராட்டத் திலிருந்து மக்களை அந்நியப்படுத்து கிறது. சமூகத்துக்கு அவை உகந்தனவாக இல்லை. அந்த விதத்திலேயே சஞ்சி கைகள், பத்திரிகைகள் சிலவற்றையும் தடைசெய்திருக்கிறோம்.

'புதியதொன்றை உருவாக்க நாம் நினைக்கிறோம். அதற்கு இடைஞ்சலானவற்றைத் தடுக்கிறோம். எமக்கு ஆதரவாக அனைத்துமிருக்கவேண்டும் என்று நாம் எண்ணவில்லை. இங்கும்கூட, விடுதலையைப்பற்றி ஒரு வார்த்தை தானும் எழுதாத 'மல்லிகை', 'மாற்றம்', 'தாயகம்' போன்றவற்றை நாம் அனுமதிக்கிறோம்.' - புதுவை கூறினார்.

வர்த்தகர்களின் விவகாரம்பற்றிக் குறிப்பிடும்பொழுது, உள்ளவர்களிடம்தான் நாம் வாங்குகிறோமே தவிர, எல்லோரிடமும் நாம் வற்புறுத்து வதில்லை என்றார். அது உண்மையா னதேதான். சாதாரண வர்த்தகர்கள் புலிகளால் தமக்கு வற்புறுத்தல் இல்லை என்றே கூறுகிறார்கள். ஆனால் பெரும் வர்த்த கர்களோ, 'நாம் கஷ்டப்பட்டுத் தானே உழைக்கிறோம். கஷ்டப்படாதவர்களுக்குக் கரைச்சல் இல்லை' என்கிறார்கள்.

பன்னிரண்டாயிரம் போராளிகளுக்கு சாப்பாடு தேவை. மிக மலிவான சாப்பாட்டைத்தான் அவர்கள் உண்கிறார்கள். ஒரு தோள்பை உடைமையுடன்தான் அவர்கள் வாழ்கிறார்கள் என்று, தம்முடைய தேவையை - நிலைமையை விளக்குகிறார் புதுவை இரத்தினதுரை.

சாதாரணமாக, ஜனநாயக அமைப்பிலேயே ஓர் அரசாங்கத்தின் அரைவாசி பதவிக்காலம் போய்விட்டால், சில சமயங்களில் அதற்கு முன்னருங்கூட - அந்த அரரசாங்கம்மீது மக்கள் சலிப்படைவது இயற்கை. அப்படியிருக்க, அரசியல் உரிமைகள் - பிரச்னைகள் எப்படியோ ஆனால், வசதியாக வாழ்ந்த மக்கள், பத்து ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படை வாழ்க்கைத் தேவைகளையுமிழந்து, இன்னல்களின் மத்தியில் பல துயரங்களையும் சுமந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் மனோநிலை வேறு இந்த யுத்தச் சூழலுக்குப் பழக்கப்பட்டு, அதில் அவர்கள் எதிர்நீச்சல்போடுவது வேறு. ஆனால், அந்த மக்கள் அமைதியை, சமாதானத்தை, தீர்வை விரும்புகிறார்கள். நான் தங்கியிருந்த நாள்கள் ஷெல் வீச்சோ, விமானக் குண்டுவீச்சோ ஏற்படாது என்று, தங்களின் உயிருக்கான உத்தரவாதத்துடன் அவர்கள் உலாவிய நாள்கள். அன்றாட தேவைகளுக்கான பொருள்கள் பலவற்றின் தடைகள் நீக்கப்பட்டு, அவற்றை அவர்கள் ஓரளவுக்கு சற்று இலகுவாகப் பெற்றுவாழ்ந்த நாள்கள். அந் நாள்களே கடினமானவைதான். அப்படியிருக்க, ஒரு யுத்தகால நாளை நினைத்துப் பார்த்தால்.....

அன்றாட தேவைகளில் கஷ்டம், சில கொள்கைகளில் முரண்பாடுகள் இருந்தாலும், எல்லோருக்குமே புலிகள்மீது ஒரு மதிப்பு, பாசம், அவர்களின் தியாகத்துக்கு தலை வணங்கும் தன்மை அந்த மக்களிடம் பெரிதாகவே இருக்கிறது.

அந்த மக்களுக்கு ஒரு விடிவு தேவை. அவர்கள் மிகவும் விரக்தியடைந்திருக்கிறார்கள். தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும், சந்திரிகாவின் தோற்றமும் இம் மக்களுக்கு புதிய எதிர்பார்ப்புகளை, நம்பிக்கையை ஏற்படுத்தியே இருந்தன. பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தடங்கல்களும், அரசாங்கத்தின் இராணுவ பலம்பற்றிய சந்திரிகாவின் பத்திரிகைச் செய்திகளும் இந்த எதிர்பார்ப்பு - நம்பிக்கையில் ஒரு சலனத்தை அந் நாள்களிலேயே ஏற்படுத் தியிருந்தன.

ஒன்று, மக்களிடம் சமாதானத்துக்கான எதிர்பார்ப்பு, ஆவல் இருக்கிறது. ஆனால், இவற்றுக்காக 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற நிலையில் அந்த மக்கள் இல்லை. தீர்வு எதுவானாலும் அதனை ஏற்றுக்கொண்டுவிட அவர்கள் தயாராக இல்லை. தாம் செலுத் திய அளப்பரும் விலையின் பொருட்டு, தமது அபிலாஷைகளை நிறைவுசெய்யும் மிக நியாயமான, நிரந்தர தீர்வொன்றையே அவர்கள் திடமாக எதிர்பார்க் கிறார்கள்.

ஆக, இந் நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புலிகளின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதும் அங்கு பெரும் ஹேஷ்யமாகவே இருந்தது. எப்படியோ, ஒரு தனி நாட்டையே ஆட்சிசெய்வதுபோன்ற நிலையிலிருக்கும் பிரபாகரன், அதனை விடுத்து ஒரு ஜனநாயக அமைப்புக்குள் வருவாரா? அந்த அமைப்பில் அவருக்குரிய இடம் என்ன? அவருடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? அத்துணை போராளிகளதும் - குறிப்பாக, பெண் போராளிகளது நிலைமைகள் - எதிர்காலம் என்ன? 'ஈழம்' தவிர்ந்த ஒன்றை ஏற்றுக்கொண்டால் அதற்காக உயிர்நீத்த அத்தனை மாவீரர்களும் வஞ்சிக்கப்பட்டவர்கள் ஆகமாட்டார்களா? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

பிரபாகரன் 40 வயதை எட்டுகின்ற - அவரது பிள்ளைகள் வளர்ந்து, ஒரு குடும்ப அநுபவமும் ஏற்படுகின்ற வேளையில், அவரது இறுக்கமான கொள்கைகளில் சற்று தளர்வுகள் ஏற்படலாமென்று ஒரு பதிலும் கூறப் பட்டது. ஆக, இவை உண்மையிலேயே புலிகளுக்கு பேச்சுவார்த்தைகளில் உள்ள கஷ்டங்களே. இவை தவிர, பேச்சுவார்த்தையில் அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியவர்களாகவுமே இருக்கிறார்கள்.

அன்றாட தேவைகளில் கஷ்டம், சில கொள்கைகளில் முரண்பாடுகள் இருந்தாலும், எல்லோருக்குமே புலிகள்மீது ஒரு மதிப்பு, பாசம், அவர்களின் தியாகத்துக்கு தலைவணங்கும் தன்மை அந்த மக்களிடம் பெரிதாகவே இருக்கிறது. அந்த மக்களிடம் மாத்திரமல்ல, கொழும்பில் சந்தித்த, கருத்து முரண்பாடுகள் கொண்ட பல்வேறு மாற்று அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களிடமும்கூட அது இருக்கிறது. 'ஈழம் என்பதில் பிரபாகரனின் விசுவாசம் சந்தேகத்துக்குரியதல்ல.' - இது, மாற்று இயக்கமொன்றைச் சார்ந்த தலைவர் ஒருவர் கூறிய வார்த்தை.

**(அடுத்த வாரம்)**

ஈழநாடு



# திரை விமர்சனம்

**திரைப்படம் : விநோதய சித்தம்**
**இயக்கம் : சமுத்திரக்கனி**
**இசை : சத்யா**
**நடிப்பு : தம்பி ராமையா, சமுத்திரக்கனி, சஞ்சிதா ஷெட்டி மற்றும் பலர்**




ஒரு நிறுவனம் ஒன்றின் உதவி பொது மேலாளராக இருப்பவர் தம்பி ராமையா. தன்னால்தான் நிறுவனம் நடப்பதாக ஒரு மமதை அவரிடம் உண்டு. அன்பான மனைவி, மகன், இரு மகள்கள் என நல்ல வசதியா கவே வாழ்கிறார். ஒரு விபத்தில் அவர் இறந்து விட, அவரை மேலோகம் அழைத்துப் போக வருகிறார் கடவுள் (?) சமுத்திரக்கனி. தான் இல்லாவிட்டால் தனது குடும்பமோ நிறுவனமோ இயங்காது அவை தொடர்பான கடமைகளை நிறைவேற்றி விட்டு வருவதாக சமுத்திரக்கனியிடம் கூறுகிறார் தம்பி ராமையா.

90 நாட்களுக்குள் அவற்றை முடித்துவிட்டு தன்னுடன் வர வேண்டும் என நிபந்தனை விதிக்கிறார் சமுத்திரக்கனி. அதுவரை தம்பி ராமையாவுடன் தானும்கூடவே இருப்பார் என்றும் சொல்கிறார். அந்த 90 நாட்களுக்குள் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

தம்பி ராமையாதான் இந்தப் படத்தின் கதையின் நாயகன். தேசிய விருது பெற்ற நடிகர் என்பதை மீண்டும் ஒரு முறை இந்த பரசுராமன் கதாபாத்திரம் மூலம் நிரூபித்திருக்கிறார். கர்வம், மிடுக்கு, தான்தான் என்ற அகங்காரம் என தம்பி ராமையா ஆரம்பத்தில் நடந்து கொள்கிறார். விபத்தில் இறந்த பின் கடவுள் உதவியால் மீண்டும் வாழ ஆரம்பித்ததும் அவரிடம் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றங்கள் ஏற்படுகின்றன. வாழ்க்கையின் அர்த்தம் என்னவென்பதை உணர ஆரம்பிக்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் அவரின் நடிப்பு அப்படி ஒரு பொருத்தத்துடன் வெளிப்படுகிறது.

கடவுளா, காலனா, விதியா என யாரென்று சொல்லாத எல்லாவற்றிற்கும் அப்பால்பட்ட ஒரு சக்தியாக வருகிறார் சமுத்திரக்கனி. தொடர்ந்து அறிவுரை கூறும் படங்களையே இயக்கி வந்த சமுத்திரக்கனி, இந்தப் படத்திலும் அறிவுரை கூறுகிறார். ஆனால், எதுவுமே நீளமான அறிவுரை அல்ல, ரத்தினச் சுருக்கமான வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகள்தான். பேசுவதை குறைத்துக் கொண்டதோடு வாழ்க்கையின் பல அர்த்தங்களை படம் பார்க்கும் ரசிகர்களுக்குப் புரிய வைக்கிறார்.

தம்பி ராமையாவின் மகனாக தீபக், மகளாக சஞ்சிதா ஷெட்டி, நண்பனாக முனிஷ்காந்த் அவர்களுக்கான பாத்திரங்களில் சரியாக நடித்திருக்கிறார்கள். தம்பி ராமையாவின் மனைவியாக ஸ்ரீரஞ்சனி. இப்படியெல்லாம் ஓர் அம்மா இருந்தால் பிள்ளைகளுக்கு வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.

சத்யா பின்னணி இசை வேறு ஒரு தளத்திற்கு படத்தை அழைத்துச் செல்கிறது. என்.கே. ஏகாம்பரம் செய்திருக்கும் ஒளிப்பதிவு இந்தப் படத்திற்கு பெரும் ஏற்றம் தருகிறது.

நாடகத்திலிருந்து எடுக்கப்பட்ட கதை என்பதால் சில இடங்களில் நாடகத் தன்மையும் எட்டிப் பார்க்கிறது. அதைத் தவிர்த்திருக்கலாம். ஒன்றேமுக்கால் மணிநேரம் கழிவது தெரியாமலே போய்விடுகிறது.

தமிழ் திரையுலகில் இப்படி ஒரு படமா என வியக்க வைக்கிறது படம்.!

ரஜினி நடிக்கும் “அண்ணாத்த“ படத்தின் டீசர் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. இந்தநிலையில் பாடல்களை யூ - ரியூப்பில் வெளியிடவுள்ளார்கள்.

நவம்பர் 4ஆம் திகதி படம் வெளியாகும் நிலையில், அமெரிக்காவில் 300 திரையரங்குகளில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு 50 திரையரங்குகளில் நவம்பர் 3ஆம் திகதி பிறீமியர் காட்சியை வெளியிடவும் திடடமிடப்பட்டுள்ளது.



இந்திய சினிமாவின் மிக உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது நடிகர் ரஜினிகாந்துக்கு நாளை வழங்கப்படவுள்ளது.

இவருக்கு இந்த விருது 2019ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், கொரோனா தொற்று பரவலால் விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவில்லை.

இதன்போது, சிறந்த துணை நடிகருக்கான விருதை விஜய் சேதுபதியும், டி.இமான் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதையும், பார்த்தீபன், ஒத்த செருப்பு சைஸ் 7 படத்துக்காக சிறந்த ஜூரி விருதையும், நாகவிஷால் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதையும் பெறவுள்ளனர்.



முன்னணி நாயகியாக வலம்வந்தவர் கீர்த்தி சுரேஷ். மகாநடி படம் மூலமாக நாயகியை மையமாகக் கொண்ட படங்களில் நடிக்க ஆரம்பித்தார். இதனால், நாயகர்களுடன் இணைந்து நடிப்பதை அவர் மறுத்து வந்தார்.

ஆனால், நாயகியை மையமாகக் கொண்டு அவர் நடித்த பிற படங்கள் தோல்வியடைந்தன. இதனால், அவர் மீண்டும் நாயகர்களுடன் சேர்ந்து

இதையடுத்து, இனி சிறிது காலத்திற்கு முன்னணி நாயகர்களுடன் சேர்ந்து மட்டுமே நடிப்பது என முடிவு செய்துவிட்டாராம் கீர்த்தி சுரேஷ். அந்த வகையில் தற்போது மகேஷ் பாபு, விஜய் படங்களில் நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.



தென்னிந்தியாவின் முன்னணி நடிகைகளில் ஒருவர் பூஜா ஹெக்டே. வாழ்க்கை வரலாறு படம் ஒன்றில் நடிக்க விரும்பு வதாக அவர் கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரின் மூன்றாவது மகாராணி காயத்ரி தேவியின்யின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிக்க விருப்பம் உள்ளதாக அவர் தனது ரசிகர்களுடன் உரையாடியபோது கூறினார்.

ஜெய்ப்பூர் மகாராணியான காயத்ரிதேவி 12 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் ராஜமாதா என ஜெய்ப்பூர் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.




உலக சினிமாவின் உயரிய விருதாகக் கொண்டாடப்படும் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்படும் இந்தியாவால் பரிந்துரைக்கப்படவுள்ள திரைப்படங்களில் ஒன்றாக மண்டேலா படமும் இடம்பிடித்துள்ளது.

இந்தத் திரைப்படத்தில் யோகிபாபு நாயனாக நடித்திருந்தார். ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்க தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தமிழ் திரைப்படம் மண்டேலா மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான டாக்டர் படம் வெளியாகி 10 நாட்கள் கடந்த நிலையில், 50 கோடி இந்திய ரூபாயை வசூலித்துள்ளது.

கொரோனா இரண்டாவது அலையால் தியேட்டர்களில் அரைவாசியாக பார்வையாளர்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையிலும் இவ்வளவு பெருந்தொகை வசூலித்து வருகின்றது. தீபாவளி வரை வேறு படங்கள் போட்டிக்கு இல்லாமையால் மாஸ்டர் வசூலை முறியடித்து விடும் என்று திரையுலகில் பேசப்படுகின்றது.



தெலுங்கில் இன்றைய முன்னணி நாயகியாக இருப்பவர் நித்தி அகர்வால். தமிழில் பூமி, ஈஸ்வரன் படங்களில் நடித்துள்ளார். அடிக்கடி ஒளிப்படப் பிடிப்பு நடத்தும் அவர் அண்மைக்காலமாக கவர்ச்சிப் படங்களை அதிகளவில் பகிர்ந்து வருகிறார். இதனால், இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் அவரை பின்தொடர்ப வர்களின் எண்ணிக்கை 1.3 கோடியை நெருங்கி வருகிறது.



# இலங்கைக்கு வந்த சிக்கல்!



இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி சுப்பர் - 12 சுற்றுக்கு தகுதி பெற்றமை இலங்கை ரசிகர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி என்றபோதிலும், சுப்பர் - 12 சுற்றில் இலங்கை அணி இடம்பெற்றுள்ள பிரிவு அவர்களுக்கு சோகத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சுப்பர் - 12 தொடரில் இலங்கை அணி இடம்பெற்றுள்ள குழு - 1 தான் அவர்களின் சோகத்திற்கும் - நம்பிக்கையீனத்துக்கும் காரணம். ஏனெனில் அந்த குழுவில், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை அணியின் இன்றைய நிலையுடன் ஒப்பிடுகையில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா மிகமிக வலுவான அணிகள். பங்களாதேஷ் அணிகூட இலங்கைக்கு பெரும் சவாலையும் அதிர்ச்சியையும் கொடுக்கவல்ல அணியாகவே உள்ளது.

குழு- 2இல் இடம்பெற்றுள்ள இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நமீபியா, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குழு 1இல் இடம்பிடித்துள்ள அணிகள் ஒப்பீட்டளவில் வலுவானவை. இதனால் முதல் சுற்றில் ஏ பிரிவில் முதல் இடத்தைப் பிடித்து குழு - 1 இல் இடம்பிடித்துள்ள இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறுவது என்பதோ அல்லது சுப்பர் - 12 போட்டியில் வெற்றிகளை பெறுவது என்பதோ அவ்வளவும் ஏன் கௌரவமான தோல்விகளை பெறுவதுகூட சாத்தியப்பாடு மிகவும் குறைவானதாகவே உள்ளது.

ஒரு காலத்தில் அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து என ஜாம்பவான் அணிகளே இலங்கை அணியுடன் வெற்றி பெறுவதே அரிதான நிலை இருந் தது. 2014 இருபது - 20 உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட அணி, இம்முறை முதல் சுற்றில் விளையாடித்தான் சுப்பர் - 12இற்கே நுழைய முடியும் என்ற நிலை. இலங்கை கிரிக்கெட்டின் இன்றைய பரிதாப நிலை அதன் ரசிகர்களுக்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை.



# எழுச்சியின் நாயகி

ரஷ்யாவில் நடக்கும் கிரெம்ளின் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்கு நுழைந்துள் ளார் கிரேக்கத்தின் மரியா சக்காரி. முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப்பை வெற்றி 6-4, 6-4 என்ற செற்களில் வெற்றி கொண்டதன் மூலமே அவர் இந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளார்.

26 வயதான மரியா சக்காரி 2015-16ஆம் ஆண்டு கிராண்ட்ஸ்லம் போட்டியில் காலடி எடுத்துவைத்தார். ஆனால், கடந்த காலங்களில் அவரால் சாதிக்க முடியவில்லை. கடந்த 6 ஆண்டுகளில் நான்காவது சுற்றுவரையே முன்னேறியிருந்தார். இந்த நிலையில் இந்த ஆண்டு அவருக்கு மகத்தான வாய்ப்பாக அமைந்தது. கிராண்ட்ஸ்லம் போட்டிகளான பிரெஞ்சு ஓப்பன், அமெரிக்க ஓப்பனில் அவர் அரையிறுதி வரை முதன்முறையாக முன்னேறினார். இது போன்று உலக ரென்னஸ் சங்கத்தின் ஆயிரமாவது போட்டியிலும் அவர் அரையிறுதி வரை முன்னேறியதுடன் சர்வதேச தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள்ளும் இடம்பிடித்தார்.

இப்போது புகழ்பெற்ற கிரம்ளின் ஓப்பனில் முன்னிலை வீராங்கனையான சிமோனாவை வீழ்த்தியிருக்கிறார். இம்முறை பட்டம் வெல்லும் வாய்ப்பு அவருக்கு இருப்பதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், கிரெம்ளின் தொடரில் காலிறுதிவரை தாக்குப்பிடித்த முன்னிலை வீராங்கனை சிமோனா மட்டுமே, தற்போது அரையிறுதிக்கு முன்னேறியிருக்கும் மற்ற வீராங்கனைகள் புதுமுகங்கள் என்பதால் மரியா தனது முதல் பெரிய பட்டத்தை வெல்வார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.



# மஹேலவின் விலகல்!

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக தற்போது பணியாற்றி வருகிறார் முன்னாள் தலைவரும் துடுப் பாட்ட வீரருமான மஹேல ஜெயவர்த்தன.

135 நாட்களுக்கு மேலாக தனது மகளை காணாது தவித்து வரும் அவர் தற்போது அணியை விட்டு விலகி நாடு திரும்பவுள்ளார். சுப்பர் 12 சுற்றுக்குள் நுழையுமா என்ற நிலையில் இருந்த இலங்கை அணிக்கு மஹேலவின் ஆலோசனைகளும் அறிவுரையும்தான் முதல் அணியாக சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைய வைத் தது. இந்த நிலையில், மஹேலவின் விலகல் அறிவிப்பு இலங்கை அணிக்கான பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.

மஹேல ஜெயவர்த்தன ஐ. பி. எல். தொடரில் மும்பை அணியின் ஆலோசகராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியிருந்தார். இதற்கு முன்னதாக 100 பந்து கிரிக்கெட் தொடரை கைப்பற்றிய சௌதர்ன் அணியின் ஆலோசகராக பணியாற்றியிருந்தார். இதனால் தொடர்ந்து கொரோனா பாதுகாப்பு வளையத்திலிருக்கும் அவர் தனது மகளை பார்த்து நீண்ட காலம் - 135 நாட்கள் கடந்து விட்டன. மகளின் பிரிவை தாங்க முடியாமலேயே அவர் அணியை விட்டு விலகி நாடு திரும்பவுள்ளார்.

ஐ. பி. எல். தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்ததால் மும்பை அணியின் ஆலோசகராக செயல்பட்ட அவருக்கு கூடுதல் அனுபவம் - அந்த மைதானங்கள் குறித்த அறிவும் உள்ளது. இது இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணிக்கு கௌரவமான நிலையை அடைய வழியமைக்கும். முதல் சுற்று போட்டியிலும் வலுவான வெற்றிகளை இலங்கை பெற்றதில் மஹேல முக்கிய காரணகர்த்தா.

அவர் மெய்நிகர் வழியில் இலங்கை அணிக்கு ஆலோசனைகளை வழங்குவார் என்று உறுதியளித்தாலும், நேரில் இருந்து வழிகாட்டுவது போன்று அமையாது. குழு 1இல் வலுவான அணிகளுடன் மோதவுள்ள இலங்கை அணிக்கு மஹேலவின் விலகல் இன்னோரு பின்னடைவாகவே இருக்கும்.

# எனது நேரம் இதுவல்ல...!



உதைபந்தாட்ட ஜாம்பவானான கிறிஸ்ரியானோ ரொனால்டோ சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்று ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், 37ஆவது வயதை எட்டும் ரொனால்டோ அந்த ஆலோசனைகளை புறக்கணித்துள்ளார்.

போர்த்துக்கல் அணிக்காக சர்வதேச போட்டிகளில் விளையாடுகின்றபோதும் மன்செஸ்டர் யுனைற்றெட்டுக்காக வெற்றிக் கிண்ணங்களை சுவீகரிக்க முடியும் என்று தான் நம்புகிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பருவகாலத்தில் ரொனால்டோ மன்செஸ்டர் அணிக்ககாக விளையாட ஒப்பந்தமானார். வயது அதிகமாவதால் போர்த்துக்கல் அணியிலிருந்து ஓய்வுபெற்றால் மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக மேலும் உற்சாகம் - உத்வேகத்துடன் விளையாட முடியும் என்று அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ரொனால்டோ, “என்னால் ஓடவோ, துள்ளிக் குதிக்கவோ, கோல் அடிக்கவோ சக்தி இல்லை என்று உணரும்போது - நான் ஓய்வு பெறுவேன். மக்களை - எனது குடும்பத்தை - ரசிகர்களை - என்னை மகிழ்ச்சியடைய செய்ய வேண்டும். போர்த்துக்கல் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். ஆனால், சம்பியன்ஸ் லீக்கில் எனக்கு அதிக இலக்குகள் - வெற்றிகள் - உதவிகள் இருக்கின்றன. நான் தொடர்ந்தும் விளையாடவே விரும்புகிறேன். மக்களை மகிழ்விக்க நான் நன்றாக உள்ளேன் என்று உணர்கிறேன்.

நான் கூட்டுக்கு முதலிடம் கொடுக்கிறேன். இதனால், எதுவும் சாத்தியம் என்று நம்புகிறேன். நான் ஓய்வுபெறுவதற்கான நேரம் இதுவல்ல - சாதிக்க இன்னும் நிறைய இருக்கின்றன - இன்னும் சில வருடங்கள் விளையாட முடியும் என்று நம்புகிறேன்” என்றும் அவர் கூறியுள்ளார்.



# பாராளுமன்றத்தில் திலகர் தொகுதி 1 நிகழ்நிலையில் வெளியீட்டு விழா

நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஆற்றிய பதினொரு உரைகள் தொகுக்கப்பட்டு “பாராளுமன்றத்தில் திலகர்” தொகுதி 1, (2015) என மின் புத்தகமாக ( EBook) வெளியிடப்பட்டுள்ளது.

பாக்யா பதிப்பக வெளியீடாக ணழழஅ செயலி ஊடாகவும் முகநூல் தளத்திலும் நிகழ்நிலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் மத்திய மாகாண சபை உப தவிசாளரும் பிரபல மலையக எழுத்தாளருமான மு. சிவலிங்கம் தலைமை வகித்தார். அபிவிருத்தியில் மலையகத்துக்கு சமத்துவம் வேண்டும் எனும் கன்னி உரையின் ஊடாகவே ஒட்டுமொத்த சமகால மலையக அரசியலின் அவசியத்தை திலகர் எடுத்துக் கூறுவதாகவும் திலகரின் பாராளுமன்ற பிரவேசம் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

பாக்யா பதிப்பக உரிமையாளர் பாக்கியம் அர்களுக்கு முதற்பிரதியையும் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கும் சிறப்பு பிரதியையும் நூலாசரியர் வழங்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற பெப்ரல் (PAFFREL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி மலையகம் சார்ந்தும் தேசிய மட்டம் சார்ந்தும் திலகரின் அரசியல் பணிகள் பாராளுமன்றில் எவ்வாறு அமைந்ததிருந்தன என்பதை சிலாகித்துப் பேசினார்.

நூல் குறித்தான பிரதான உரையை ஆற்றிய மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக செயலாளர் நாயகமும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் அரசியல் ஆய்வாளருமான பி. ஏ. காதர் (லண்டன் ) மலையகத்தில் இருந்தான மக்களவை பிரதிநித்துவ வரலாற்றை நேர்த்தியாக எடுத்துக்கூறி அதில் திலகரின் வகிபாகத்தையும் எடுத்துரைத்தார். மூன்று கட்டங்களான இவரது உரை பாராளுமன்ற அரசியிலின் மோசமான பக்கத்தையும் அதனை கையாளும் விதம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகவும் அமைந்தது. அரசியல் ஆர்வலர்கள் அவசியம் கேட்க வேண்டிய இந்த உரை நூலின் முன்னுரையாகவும் இடம்பெற்றுள்ளது.

அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதி லிங்கம் (யாழ்ப்பாணம்) தனது உரையில் திலகரின் பல்பரிமாண உரைகளையும் விதந்து உரைத்ததுடன் மலையக அரசியல் அடுத்துபயணிக்க வேண்டிய திசைவழி குறித்தான தனது அபிப்பிராயங்களையும் பகிர்ந்து கொண்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் எம். ஆர். ஸ்டாலின் ஞானம் (பிரான்ஸ்) வட-கிழக்கு அரசியல் தலை மைத்துவங்களுக்கு வெளியே வாழும் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் செல்நெறி எவ்வாறு அமைய வேண்டும் எனும் தெளிவானபார்வையை இந்தத் தொகுப்புநூல் தருவதாக் கூறி இருந்தார்.

தமிழ்நாட்டில் இருந்து இணைத் துக்கொண்ட தாயகம் திரும்பியோர் வாழ்வுரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் வழக்குரைஞ ருமான தமிழகன், மலையகத்தில் இருந்து வெளியேற நேர்ந்து தாயகம் திருமலபியோர் எனும் பெயரில் தமிழ் நாட்டில் வாழும்மலையகத்தவர்கள் திலகரை தமது பாராளுமன்ற பிரதிநிதியாகவும் பார்ப்பதாகவும் அவரது உரைகளை தொடர்ச்சியாக கேட்பவர்களாகவும் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

சமூகப் பண்பாட்டு ஆய்வறிஞர் ஏ.பி.எம். இத்ரிஸ் (மட்டக்களப்பு) திலகரின் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் சமூக அரசியல் எவ்வாறெல்லாம் முக்கியத்துவம் உடையன என்பதை அவரது மாணவர் ஊக்குவிப்புப் பணிகள், இலக்கியப் பணிகள், ஏனைய சமூகங்களுடனான ஊடாட்டம் முதலான விடயங்களின் நூலின் உள்ளடக்கத்தையும் தொடர்புபடுத்தி பேசி இருந்தார்.




ஒவ்வொரு உரையாளர்களும் நூலில் அடங்கியுள்ள மலையக அரசியலின் பல பரிமாணங்களையும் எடுத்துக் கூறியதோடு தமக்கும் திலகருக்குமான தனிப்பட்ட தொடர்பாடல்கள் குறித்தும் தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

நிகழ்ச்சிகளை பிரபல அறிவிப்பாளர் நாகபூஷணி கருப்பையா நேர்த்தியாக நெறிப்படுத்தி தொகுத்தளித்து இருந்தார்.

தன்னைச் சந்திக்கும் பலரும் தனது பாராளுமன்ற உரைகளின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடியமையால் அதனைத் தொகுக்கும் முயற்சியில் இறங்கியதாகவும், இந்தநூல் ஆய்வாளர்களின் வசதிக்காக அன்றி மக்களின் வாசிப்பினை இலக்காக் கொண்டே தொகுக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்புரையில் நூலாசிரியர திலகர் எடுத்துத்துரைத்தார்.

# பிரிட்டனைப் பின்பற்றுமா போலந்து? “போலெக்ஸிற்” அச்சத்தில் ஐரோப்பா

**குமாரதாஸன்**



இறுதி மாநாட்டில் அங்கெலாவுக்கு தலைவர்கள் எழுந்து பிரியா விடை “அங்கெலா இல்லாத ஐரோப்பா வத்திக்கான் இல்லாத ரோமாபுரி, அல்லது ஈபிள் கோபுரம் இல்லாத பாரிஸ் போன்றது”

இப்படித் தெரிவித்திருக்கிறார் ஐரோப்பிய ஒன்றியக் கவுன்சிலின் தலைவர் சார்ள்ஸ் மிச்செல் (Charles Michel). தனது 16ஆண்டு கால அரசியல் பயணத்தை நிறைவு செய்கின்ற அங்கெலா மெர்கல் பிரெசெல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாட்டில் பங்குபற்றி னார். அது அவர் கலந்து கொள்கின்ற 107 ஆவது மாநாடு. அதே நேரம் கடைசி மாநாடும் கூட என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

2005 ஆம் ஆண்டு முதலாவது ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களது மாநாட்டில் அவர் அப்போதைய பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் போன்றவர்களுடன் கலந்து கொண்டார்.

ஜேர்மனியில் நடைபெற்ற தேர்தலின் பின்னர் அங்கு புதிய கூட்டணி அரசு அமைப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. 67 வயதான அங்கெலா தற்சமயம் இடைக்காலச் சான்சிலராகப் பதவியில் நீடிக்கிறார். எதிர்வரும் டிசெம்பருக்கு முன்னராக அங்கு புதிய ஆட்சி அமைக்கப்படாவிட்டால் ஜேர்மனியின் சான்சிலர் என்ற ரீதியில் அடுத்து இன்னொரு மாநாட்டில் கலந்துகொள்கின்ற சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கலாம்.

கடந்த 16 ஆண்டு காலப்பகுதியில் ஐரோப்பா எதிர்கொண்ட நெருக்கடிகளைத் தனது பலமாகிய இணக்க வழிமுறை ஊடாகத் தீர்த்து வைத்தவர் மெர்கல்.“ஒரு சமரச இயந்திரம்” என்றும் (‘compromise machine’) ஐரோப்பாவின் “திசை காட்டி” (‘compass’) எனவும் இன்றைய மாநாட்டில் தலைவர்கள் அவருக்குப் புகழாரம் சூட்டினர்.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் கூடுகின்ற ஐரோப்பா கட்டடத்தின் (Europa building) அடையாளமாக அமைந்த நினைவுப் பரிசு ஒன்றும் அங்கெலாவுக்கு வழங்கப்பட்டது. இன்றைய மாநாட்டில் அங்கெலாவின் அரசியல் பயணம் பற்றிய இரண்டு நிமிட வீடியோப் படக் காட்சி ஒளி பரப்பப்பட்டது. அச்சமயத்தில் தலைவர்கள் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினர்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் போலந்துக்கும் இடையே சட்டங்கள் தொடர்பாக எழுந்துள்ள முறுகல் நிலைக்கு மத்தியில் பிரெசெல்ஸ் மாநாடு நடைபெற்றது. போலந்து நாட்டின் அதி உயர் அரசமைப்பு நீதிமன்றம்(constitutional court) அண்மையில் வழங்கிய ஒரு தீர்ப்பு இரண்டு தரப்புகளிடையிலும் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

போலந்தில் உள்நாட்டில் உருவாக்கப்படுகின்ற சட்டங்கள் பிரெசெல்ஸில் வரையப்பட்ட ஐரோப்பியச் சட்டங்களை விடவும் முதன்மையானவை- மேலானவை -என்று அது அளித்த தீர்ப்பு 27 நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஐரோப்பியக் கட்டமைப்புக்குள் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி இருக்கிறது.

சட்டங்கள் தொடர்பில் ஒன்றியத்தை மீறித் தனி வழி செல்லப் போலந்து முயற்சிக்கிறதா என்று எழுப்பப்படும் கேள்விகள், பிரிட்டனின் “பிரெக்ஸிட்” போன்று அடுத்து ஒரு “போலெக்ஸிற்” ('Polexit') பிரிவின் ஆரம்பமாக இந்த விவகாரம் மாறிவிடக் கூடுமோ என்ற அச்சத்தைத் தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

அங்கெலா மெர்கல் இன்றைய தனது உரை யில் போலந்து அரசை வார்த்தை களால் தாக்குவதைத் தவிர்த்து அமைதி பேணும் வழிமுறைகள் ஊடாகப் பாரிய சேதம் ஒன்றைத் தவிர்க்கவேண்டிய நிதானத்தை முதன்மைப் படுத்தினார். ஆனால் அவர் மக்ரோன் போன்ற தனது சக தலைவர்களை எச்சரிக்கை செய்தார்.

பிரிட்டனைப் போலன்றி போலந்து ஐரோப்பிய ஒன்றியக் கட்டமைப்பின் மையத்தில் உள்ள நாடு ஆகும். அதனோடு ஏற்படக் கூடிய பிரிவினை கட்டமைப்புக்குப் பலத்த பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடியது.



# சுற்றிவளைப்பு

சாந்தன்

காலை அசா தாரண அமைதியுடனிருந்தது. அணில்களின் கீச்சிடுதல்கள் மட்டும். இருந்திருந்து விட்டு எங்கோ ஒரு காகம். இரவெல்லாம் ஓடி இன்னும் விடாமல் ஒலிக்கிற வீடியோக் காட்சி இவரைச் சல்கள்கூட ஒழுங் கையின் ஒரு வீட்டிலிருந்தும் வர வில்லை. இரவு நல்ல மழை. ஆனால், இப்போது வானம் வெளித்திருந்தது.

"பாண் வாங்கக் கடைக்குப் போகேல்லையே, ரகு?" அம்மா நினைவு படுத்தினா.

"காசைத் தாங்கோ" எழுந்து நொண்டியபடியே போய், கொடியில் கிடந்த சட்டையை எடுத்தான்.

முச்சில்லு வண்டி சேற்றில் அசைய மறுத்தது. சில்லின் கைப்பிடியைப் பலங்கொண்ட மட்டும் அழுத்தினான். சங்கிலி அறுந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. இப்படியான வேளைகளிலெல்லாம் நேர்வதேபோல, அவனது இயலாமை பற்றிய அந்தக் கவலை இப்போதும்- புடைத்தெழுகிற இந்த வலதுகைத் தசைநார்கள் மாதிரிப் -பொங்கிற்று.

"பொறு, வாறன்" அம்மா விரைந்து வந்து வண்டியைத் தள்ளியதுடன் படலையையும் திறந்துவிட்டா. தெருவில் வண்டி இலகுவாக நகர்ந்தது.

பின்னாலிருந்து வந்த ஒரு சைக்கிள் வலு வேகமாக அவனைத் தாண்டிச் சென்றது.

"குட் மோனிங், ரகு!", பாலாவின் குரல். ரகு வாயைத் திறக்கமுன்னரே சைக்கிள் ஒழுங்கை வளைவில் திரும்பி மறைந்தது. எண்ணற்ற தடவைகள் வந்து போகும் அந்த வலி இப்போதும் அவனை மூழ்கடிக்க, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். தன்னைப் போன்ற துரதிஷ்டசாலியான ஒரு பிறவி இருக்கமுடியாது என்றுபட்டது. எல்லோராலும் நடக்க, ஓட, சைக்கிளை மிதிக்க, காற்றுப்போல நினைத்த இடமெல்லாம் போய்வர முடிகிறது. மிருகங்கள், பறவைகள்கூட. அவனுக்கு மட்டும் ஏனிப்படி?

தன்னொத்த வயதுக்காரர்களெல்லாம் நினைவில் வந்தார்கள். எல்லோரும் ஏதோ முயற்சியும் முன்னேற்றமுமாய்த் தானிருக்கிறார்கள் குடும்பம், குழந்தைகள் என்றுகூட. முப்பது வயதாகியும் தான்மட்டும் எந்த நிலை யான தொழிலோ வருமானமோ இன்றி.. போதாக்குறைக்கு நாட்டு நிலைமை வேறு.

மயிலு கடை பூட்டியிருப்பது தொலைவிலிருந்தே தெரிந்தது. கைக்கடியாரத்தைப் பார்த்தான். நேரம் ஏழரையைத் தாண்டியாயிற்று. என்னதானிருந்தாலும் ஏழுக்கு முதலே கடையைத் திறக்கிறவர் மயிலு. என்னாகியிருக்கும் இன்றைக்கு? கடைக்கு முன்னால் வேப்பமரத்தின் கீழிருந்த கல்லிற் குந்தியிருந்த சோமர் இப்போது கண்ணிற்பட்டார்.

ரகுவைக் கண் டதுமே, "இவன் இன்னும் வரேல்லை. எனக்கு நேரம் போகுது" என்று உரக்க அலுத்துக் கொண்டார்.

"இண்டைக்கு ஏதோ வித்தியாசமாயிருக்கு" என்றான் ரகு.

"அந்தா!" என்றார் சோமர், அதைக் காதில் விழுத்தாமலே, "மயிலு வாறான்.."

எக்கச்சக்கமான வேகத்தில் வந்த மயிலு சட்டென்று பிரேக் பிடித்துக் குதித்தார்.

"உங்களுக்குத் தெரியாதோ?" என்றார் சண்டிக்கட்டை அவிழ்த்து விட்டபடி. குரல் பயத்தில் ஊறியிருந்தது.

"என்ன?" என்றார்கள் இரு வருமே.

"இண்டைக்கு ஊரடங்காம்."

"ஆர் சொன்னது? ரேடியோ கீடியோ ஒண்டிலும் சொல்லேல் லையே?"

"இங்க மாத்திரந்தான் -இந்த சுற்றுவட்டாரம் இரண்டு மூண்டு ஊரிலை மட்டும்."

"உனக்கு ஆர் சொன்னது?" சோமர் கேட்டார், குழம்பிப்போய்.

"அவங்கள்தான்!" என்றார் மயிலு. "விடிய ஒருக்கால் தோட்டத் தடிக்கப் போய் வருவமெண்டு போனால், அரசடி திரும்பின கையோட எங்கையெண்டிருந்தெண்டு தெரியாமல் மூண்டு நாலு பேர் வந்து மறிச்சாங்கள். எனக்கு ஈரல் குலை நடுங்கிச் சுது. 'இண் டைக்கு ஐஞ்சரையிலையிருச்து ஊரடங்கு, திரும்பிப் போ' எண்டு கலைச்சு விட்டாங்கள்."

"ஆண்டவன்தான் கதி," என்றபடி சோமர் திரும்பி ஓடுவதுபோல நடந்தார்.

ரகுவுக்கு முதலே சேதி வீட்டுக்கு வந்திருந்தது. அம்மா படலையடி யில் பார்த்திருந்தா, பயமும் பதற்ற முமாய். பதினைந்துக்கும் அறு பதுக்கும் இடைப்பட்ட எல்லாரும் அம்மன் கோவிலடிக்குப் போக வேண்டுமாம். "என்ன அநியாயத் துக்கோ?" அம்மா புலம்பினா. தூரத்தில் நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டது.

"உள்ளே வா, கெதியா," அம்மா படலையைச் சாத்தினா.

யாரோ அழுதபடி கூப்பிட்டார்கள். ராணி அக்கா.

"இந்த வளர்ந்த பிள்ளையளை வச்சுக்கொண்டு என்ன செய்யப்போறம்? ஆரோ தலையாட்டி வருகுதாம்..."

"பயந்து என்ன செய்யிறது, பிள்ளை? அவனைக் கேள்! " அம்மா மேல்நோக்கி இரண்டு கைகளையும் விரித்தா. நாய்களின் குரைப்பு நெருங்கி வந்தது, நாலைந்து இடங்களிலிருந்து.

என்னவென்று தெரியாத, தவிர்க்கவே முடியாத, அந்தப் பயங்கரத்திற்காக அவர்கள் காத்திருந்தார்கள். வயிற்றுக்குள் ஏதோ செய்தது, நெஞ்சு இடிப்பது கேட்டது. ஒழுங்கையில் இப்போது சனங்கள் போகத் தொடங்கியிருந்தார்கள். மூரி வேலி வரிச்சுக்கூடாய் விரையும் கால்கள். விடாமல் வரிசையாய். இடைக்கிடை செல்கிற கனத்த காலணிகள், காக்கிக் காற்சட்டைகள்.

அப்பா அருகில் வந்தமர்ந்தார்.

"நானும் உன்னோட கோயிலடிக்கு வாறன்"

"எதுக்கு? தேவையில்லை!" என்று சொன்னாலும் ஆறுதலாயிருந்தது.

"டக்கெண்டு ஒருவாய் சாப்பிடு..." என்றார், அப்பா.

"வேண்டாம்."

"ஒண்டும் சாப்பிட மனம் வராதுதான் இப்ப." அப்பா சொன்னார்,

"எண்டாலும், உள்ளதிலை ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டு வா."

"தேவையில்லை," என்றான் ரகு.

"எத்தினை மணிக்கு விடுவாங்களோ!"

'விடுகிறதெண்டாலும் !' என்று நினைத்ததை அவர் சொல்ல வில்லை. கண்களை ஒரு நிமிடம் மூடிக் கொண்டார். அம்மா சாமியறையில் கும்பிட்டுக்கொண்டிருப்பது அவருக்குத் தெரியும்.

படாரென்று படலை திறந்தது.

"யாரு, வீட்டில?", அந்நியக் குரலொன்றின் அதட்டல். ஐந்தாறுபேர் உள்ளே நுழைந்தார்கள்.

அம்மா பூசையறையிலிருந்து வெளியே வந்திருந்தா. கைகளிரண்டும் நடுங்குவது வடிவாகத் தெரிந்தது.

"எத்தனை வயசு ஒங்களுக்கு?"

"அவவுக்கு அறுபத்தொண்டு, எனக்கு அறுபத்தஞ்சு"

"அப்ப, நீ வா!", வந்தவன் ரகுவைக் காட்டினான்.

"நானும் வாறன்", அப்பா முச்சில்லு வண்டியைப் பிடித்தார்.

அதேவேளை, வீட்டினுள்ளே இருந்து இன்னொரு குழுவாக படை யாட்கள் வந்ததை ரகு கண்டான். பக்க வாட்டால் மேலுமொன்று! பின்வேலி வெட்டி நுழைந்திருக்கிறார்கள்.

"நீ வரமுடியாது", முன்னால் நின்றுகொண்டிருந்தவன், அப்பாவைத் தடுத்தான்.

"அவனைத் தனிய விடேலாது", வண்டியைத் தொட்டபடியே அப்பா படலைக்கு வெளியே வந்தார்.

சனங்கள் சாரிசாரியாகப் போன படியிருந்தார்கள். ஆண்கள், பெண்கள், இளம் பையன்கள், இளம் பெண்கள், குழந்தைகளைத் தனியே வீட்டில் விட்டுவிட்டு வர இயலாத இளந்தாய் மார்.. எல்லோரும் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள்.

சுரேனும், வெள்ளையும் கைகாட்டி விட்டுப்போனார்கள். கணேஷ் குடும்பத்தாருடனே போனன். தாய் தகப்பனுக்கு அறுபதாகவில்லைப் போலும். இருந்தாற் போல முன்வீட்டில் அமளி. யோகன் பெண்சாதி குளறிக்கேட்டது.

"இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் தகப்பன் அவர். அவரை ஏன் கூப்பிடுறியள்?", போன மாதம் தான் பிறந்த சிசு அவள் கையில் இருந்தது. மற்றது பின்னால்.

"நீ இருக்கலாம், ஆனால் அவன் வரணும்!" படையாள் மிரட்டினான்.

ரகுவை வெளியே அழைத்து வந்தவர்களில் ஒருவன் ஏதோ சொன்னான்.

"சண்டைக்கி போய்தானே காலு போனது..? " அருகே நெருங்கி எதிர்பாராத விதமாய் ரகுவின் சாரத்தை திடீரென முழங்கால் வரை இழுத்தான்.

போலியோவால் பாதிப்புற்றுச் சூம்பி வளைந்த கால்கள் தெரிந்தன.

"அவனை விடு!" கொமாண்டர் குரைத்தபடி நகர்ந்தான். அவன் ஆட்கள் பின் தொடர்ந்தார்கள்.

அப்பாவின் பெருமூச்சு பெரிதாய்க் கேட்டது. இன்னமும் எதிரே சனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள்.

இன்று வந்தது என்றுமில்லாத சுயவெறுப்பு என்று புரிந்தது ரகுவுக்கு.

▼ ▼ ▼

(தனது ஆங்கில மூலக் கதையிலிருந்து ஆசிரியரே மீளுருவாக்கியது)



# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்டபட்ட வட்டாரம் 20 கோவில் ஒழுங்கையில் அமைந்த 54, 46, 48, 52, 52/8 ஆகிய இலக்கங்கள் கொண்ட ஆதனங்களின் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல்.

மேற்படி ஆதன இலக்கங்களில் இல. 46, இல. 48, இல 52, இல. 52/8 ஆகிய இலக்கங் களின் ஆதனப் பெயர் எமது ஆதனப்பதிவேட்டில் எம்.எம்.சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகின்றது

ஆதன இலக்கம் 46 என குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4823ம் இலக்க 31.05.1997 திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கவடிவேல் அவரது மகள் அதே இடத்தைச் சேர்ந்த தங்கவடிவேல் மகள் கலா என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார். இவ்வாதனம் எனது மாதாவழி முதுசமும் எனது நெடுங்கால தடையற்று ஆட்சியுடையதென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களிற்கு மேலாக எதுவித தங்கு தடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின் படி அட்சி உரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி இந்த நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க. கேசவன் முகதாவில் 5285ம் இலக்க 06.08.2000 ம் திகதிய உறுதி மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கவேலும் பெண் கலாவும் ஆகிய இவர்கள் நாகராசா முத்துக்குமாரு பெண் மல்லிகாதேவி என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று நாவாந்துறை இறை "ஆயிலடி" நிலப்பரப்பு 0 குளி 12.90 ம் வீடும் பயிர வகைகளும் இது 1996.12.26 ம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு வ.சிவராசா அவர்களால் அளந்து வரைந்த 1618 ம் இலக்க நில அளவைப் படத்தில் சுட்டிய 1ம் இலக்க துண்டும் குறித்த படத்தில் சுட்டிய 10ம் இலக்க துண்டில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப்பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் வாய்க்கால் வழி பாவிப்புரித்தும்

**எல்லைகள்**

வடக்கு : சேச் லேன்
கிழக்கு : குறித்த படத்தின் 2ம் இலக்க துண்டு
மேற்கு: இருதயமுத்து டெய்சியின் ஆதனம்
தெற்கு : குறித்த படத்தின் 6ம் இலக்க துண்டு இதடங்கலும்

தற்போது இவ் ஆதனத்தை நாகராசா முத்துக்குமாரு பெண் மல்லிகாதேவி என்பவர் தனது பெயரிற்கு எமது ஆதன பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

ஆதன இலக்கம் 48 என்ற ஆதனமானது ஆதனப் பதிவேட்டில் எம். எம். சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகின்றது. இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4826 ம் இலக்க 31.05.1997ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதியின் மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவர் அவரது மகள் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கனகரத்தினம் மகள் ஜெயரஞ்சினி என்பவருக்கு நன்கொடை உறுதிமூலம் வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் எனது பிதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியு மாயுள்ளதென்றும், குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்குதடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைசட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

இவ்வாதனமானது 9464 இலக்க 10.05.2006ம் திகதிய நன்கொடை உறுதிமூலம் யழ்ப்பாணம் நாவாந்துறை கனகரத்தினம் மகள் செல்வரஞ்சினி அல்லது ஜெயரஞ்சினி என்பவர் தனது மாதா கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவருக்கு நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

**ஆதன விபரம் வருமாறு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை "ஆயிலடி" நிலப்பரப்பு 0 குளி 12.30 ம் வீடும் பயிர்வகைகளும் இது 26.12.1996 ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா வ.சிவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 1618 ம் இலக்க படத்தில் சுட்டிய 6ம் இலக்க துண்டு ஆகும்.

**எல்லைகள்**

வடக்கு : 1618ம் இலக்க நிலஅளவைப் படத்தின் 1ம் 2ம் இலக்க துண்டுகள்
கிழக்கு : குறித்த படத்தின் 2ம் 3ம் இலக்க துண்டுகள்
மேற்கு : ஒழுங்கை
தெற்கு : குறித்த படத்தில் சுட்டிய 7ம் இலக்க துண்டும் இதனடங்கலும்

குறித்த படத்தில் சுட்டிய 10ம் இலக்க துண்டிற்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப்பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கையால் (சேச் லேன் காணிக்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும்

தற்போது கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவர் தற்பொழுது இவ்வாதனத்தை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

இல.52 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதன வரி பதிவேட்டில் எம். எம். சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகின்றது. இவ் ஆகனத்தை யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த செல்லையா கைம்பெண் பொன்னம்மா என்பவர் அவரது மகள் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த பரமு குணராசா பெண் கனகேஸ்வரிக்கு நன்கொடை யளித்துள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு க. கேசவன் முகதாவில் உறுதி இல. 4829 இல் 31.05.1997 திகதி யிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் இவ்வாதனம் எனது மாதாவழி முதுசம் எனவும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுடையது எனவும் குறித்த ஆதனத்தில் 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடை இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத் தின் 3ம் பிரிவின் படி ஆட்சி உரிமை பெற்றுள்ளேன் என வெளிப்படுத்தி நன்கொடை உறுதி எழுதிக்கொடுத்துள்ளார்.

**ஆதன விபரம்:**

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை யாழ்ப்பாண மாநகர சபை 20ம் வட்டாரத்தில் கோவில் ஒழுங்கை 26/56 ம் இலக்கத்தில் வரி மதிப்பு இலக்கம் கொண்ட ஆயிலடி நிலப்பரப்பு 5 குளி 14.30 இது 1996.12.26ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா வ.சிவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 1618 ம் இலக்கப் படத்தில் சுட்டிய 1ம் 2ம் 3ம் 4ம் 5ம் 6ம் 7ம் 8ம் 9ம் 10ம் இலக்க துண்டுகள் இதில் குறித்த படத்தில் சுட்டிய 9ம் இலக்க துண்டு இதில் நிலப்பரப்பு 0 குளி 1290 ம் வீடும் பயிர்வகைகளும் குறித்த படத்தில் சுட்டிய 10 ம் இலக்க துண்டுக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப் பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்

**எல்லைகளாக**

வடக்கு : குறித்த படத்தில் சுட்டிய 3ம் 10ம் இலக்க துண்டுகள்
கிழக்கு : சின்னவி அருமைத்துரைக்கும் சுப்பிரமணியம் சந்திராவிற்கும் உரிய ஆதனங்கள்
மேற்கு : குறித்த படத்தல் சுட்டிய 8ம் இலக்கத் துண்டு
தெற்கு : சிவலிங்கம் பெண் சோதிமலரின் ஆதனம்

இதனடங்கலும் குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோயில் ஒழுங்கையால்( சேச் லேனால்) இக் காணிக்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும்

தற்போது இவ் ஆதனபெயர்மாற்றத்திற்காக பரமு குணராசா பெண் கனகேஸ்வரி என்பவர் எமது ஆதனப் பதிவேட்டில் தனது ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

ஆதன இல. 5278 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் எம். எம். சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் இல 4827 31.05.1997 ம் திகதி யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கந்தையா கைம்பெண் இராசமணி ஆகியவர் அவரது பேர்த்தி நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கந்தசாமி மகள் குணதீஸ்வரி என்பவருக்கு நன்கொடை உறுதி வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் எனது மாதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சி யுடையதென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சியுரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி நன்கொடை உறுதி முடித்துள்ளார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு வி.மணிவண்ணன் முகதாவில் 617ம் இலக்க 15.02.2019 ம் திகதிய அறுதி உறுதி மூலம் நாவாந்துறை இல. 52/8 கோவில் வீதியைச் சேர்ந்த விக்ரர் பிறேம்குமாரும் பெண் குணதீஸ்வரியும் ஆகிய இவர்கள் சுப்பிரமணியம் உதயதாசும் பெண் விக்கினேஸ்வரியும் என்பவர்களுக்கு ஆதனத்தையும் அதற்கு சேர்ந்தவைகளையும் அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்துள்ளார்.

**ஆதன விபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு, யாழ் மாநகர சபை கிராம அலுவலர் பிரிவு J/84 ஆயிலடி நிலப்பரப்பு ) குளி 12.90ம் வீடும் பயிர்வகைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா அவர்களால் 1996.12.200 திகதி அளந்து வரைந்த 1618ம் இலக்க நில அளவைப் படத்தின் 7ம் இலக்க துண்டாக காட்டப்பட்டுள்ளது.

**எல்லைகளாக**

வடக்கு : 1618ம் இலக்க படத்தின் 6ம் இலக்க துண்டு
கிழக்கு : 1618ம் இலக்க படத்தில் 3ம் இலக்க துண்டு
மேற்கு : ஒழுங்கை.
தெற்கு : குறித்த நில அளவைப் படத்தில் 8ம் இலக்கத் துண்டு

இதனடங்கலும் குறித்த படத்தில் 3ம் துண்டாக காட்டப்பட்ட 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கைக்கு இக் காணியில் இருந்து போக்குவரத்து செய் யும் உரித்தும் இதற்கு சேர்ந்தவைகளும் இன்னும் குறித்த படத்தில் 10ம் துண்டாக காட்டப்பட்ட ஆதனத்திலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் 3ம் துண்டு பாதையால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்,

தற்போது இவ்வாதனத்தை சுப்பிரமணியம் உதயதாசும் பெண் விக்கினேஸ்வரியும் ஆகிய இவர்கள் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப் பித்துள்ளனர்.

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட வட்டாரம் 20 கோவில் ஒழுங்கை ஆதன இல 54 என்பது எமது ஆதனப் பதிவேட்டில் மொஹமட் மொஹிடீன் அப்துள் காதர் என்ற பெயரில் காணப் படுகின்றது.

பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4824 ம் இலக்க 31.05.1997 திகதியிடப்பட்ட நன்கொடை - யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த சின்னத்தம்பி பூலோகராசா என்பவர் தனது மனைவி பூலோகராசா பெண் புவனேஸ்வரி என்பவருக்கு நன்கொடை யளித்துள்ளார்.

இவ்வாதனம் தனது பிதாவழி முதுசம் என்றும் நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுரிமையுடைய தென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களிற்கு மேலாக தங்குதடையற்ற ஆட்சியிலிருந்து இலங்கை ஆட்சியுரிமை சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்று வெளிப்படுத்தி நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார். பிரசித்த நொத்தாரிசு அ.இராசரட்ணம் முகதாவில் உறுதி இல 8482 இல் 07.12.2011 ம் திகதிய அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி பூலோகராசாவும் பெண் புவனேஸ்வரியும் என்பவர்கள் அவ்வூர் தம்பிராசா திருக்கேதீஸ்வரனும் பெண் ஜெகதீஸ்வரியும் என்பவருக்கு அறுதி உறுதி எழுதிக்கொடுத்துள்ளாகள்.

**ஆதன விபரம் வருமாறு**

வடமாகாணம் யாழ்ப்பானமாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்னை கோவிற்பற்று வண்ணார்பண்னை தென்மேற்கு இறை ( நாவாந்துறை இறை) ஆயிலடி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா 26.12.1996 ம் திகதி அளந்து 1-10 துண்டுகளாகப் பிரிவிட்டு வரைந்த 1618 ம் இலக்கப்படத்தின் படி துண்டு 4 என சுட்டப்பட்ட பாகம் குளி 12.90 ம் வீடும் பயிர் வகைகளும் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும். இது மேலும் குறித்த படத்தில் துண்டு 10 என சுட்டப்பட்ட பாகத்தில் உள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும் குறித்த படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட 10 அடி அகலப்பாதையில் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**எல்லைகள்**

கிழக்கு : ஒழுங்கை
வடக்கு : கோவில் ஒழுங்கை
மேற்கு : குறித்த படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட பாகம்
தெற்கு : குறித்த படத்தில் துண்டு 5 என சுட்டப்பட்ட பாகம் இதனடங்கலும் இன்னும் குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்கத் துண்டான 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கையால் (சேச் லேனால்) இக்காணிக்கு போக்குவரத்து செய்யும் உரித்தும். தற்போது தம்பிராசா திருக்கேதீஸ்வரனும் பெண் ஜெகதீஸ்வரியும் இவ் ஆதனத்தை தற்போது தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

எனவே மேற்குறிப்பிட்ட ஆதனங்களில் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்துமூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனங்கள் மேலே விபரித்த ஆதனம் தொடர்பான விண்ணப்பதாரிகளின் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனங்கள் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற் கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர் மாநகரசபை.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

35. நீர்ப்பாத்திரத்தில் இடும் போது நீரில் மிதக்கும் பொருள்

1. இரும்பாணி 2. கல் 3. பனிக்கட்டி 4. நாணயக்குற்றி

36. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படும் உபகரணம்

1. நுகத்தடி 2. வனைசில்லு 3. வாள் 4. மணியாசு

37. தேசிய இலச்சினையில் தார்மீகத்ததைக் குறிப்பது

1. நெற்கதிர் 2. தர்மச்சக்கரம் 3. மலரிதழ் 4. நிறைகழசம்

38. உப்புத்தூள் விரைவாகக் கரைவது

1. தண்ணீரில் 2. வெந்நீரில் 3. குளிரூட்டிய நீரில் 4. கொதித்தாறிய நீரில்

39. உடலை வளர்க்க உதவும் போசனை மிகுந்த உணவு


1. பருப்பு 2. பசளிக்கீரை 3. எலுமிச்சம் சாறு 4. குரக்கல் ரொட்டி

40. நீரை உறிஞ்சும் பொருள் அல்லாதது

1. கடதாசி 2. காட்போட் அட்டை 3. சீலைத் துண்டு 4. றெஜிபோம் துண்டு

41. சித்திரை மாதத்தில் பூப்பது

1. புளி 2. கொன்றை 3. நாகமலர் 4. முள்முருக்கு

42. 

எழுத்து A இனால் காட்டப்படும் பூவின் பகுதி

1. அல்லி 2. குறி 3. புல்லி 4. தம்பம்

(25 ஒ 1�புள்ளி 25 புள்ளிகள்)

### பகுதி II

விடைகள்

1) 1. உறவினர்
   2. 1. மாந்தர்
      2. உதிரம்
      3. அப்பா
      4. உள்ளம்
   3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
   4. உடன் பிறந்தவர் போல்
   5. நன்மை செய்பவர்
   6. ஓடும்
   7. நீண்ட கண்ணீரில்
   8. நன்மை - தின்மை

2) 1. மாந்தர்
   2. உடன் பிறந்தவர்

3) மண், மாலை, மெத்தை, மோடன்

4) 1. செய்தித்தாள்கள் படங்களுடன் செய்திகளையும் தகவல்களையும் தருகின்றன.
   2. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

5) 1. அகவும்
   2. நாற்று
   3. பிள்ளை

6) 1. சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது

# முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தால் மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது அரசு!

## பாராளுமன்றத்தில் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 24

"அரசின் முறையற்ற பொருளாதார முகாமைத்தும் நாட்டு மக்களை நெருக்கடி நிலைக்குள் தள்ளியுள்ளதுடன் மீண்டும் 1970 - 1977 ஆண்டுகளின் வரிசை யுகத்தை உருவாக்கியுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் அரச ஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் அரசிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும்போதே இவ்வாறு குற்றஞ்சாட்டிய சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

"அரசிடம் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வுகள் இல்லை. தோல்வியடைந்த பொருளாதார முகாமைத்



துவமே மக்களை இந்தளவுக்கு பிரச்னையில் தள்ளியுள்ளது. இப்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விலைகளை அதிகரிக்கும் போது, ஓய்வு பெற்றவர்கள், அரச ஊழியர்கள், நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்வது என்று கேட்கின்றேன்.

இதேவேளை, தற்போது விவசாயிகள் உரம் இல்லாமல் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பெருமையுடன் வாழ்ந்த விவசாயிகள் இன்று வறுமையால் அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில் 7 மூளையுடைய அமைச்சர் ஒருவர் அனைத்து பொருள்களினதும் விலைகளை குறைப்பார் என்றும் கடந்த காலங்களில் கூறினர். ஆனால், தற்போது அந்த 7 மூளைக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இன்று எமது நாட்டில் வரிசை யுகம் ஒன்று உருவாகி உள்ளது. சீனி வரிசை உள்ளது. அரிசி வரிசை உள்ளது. எரிவாயு வரிசை உள்ளது. பால்மா வரிசை மற்றும் சிமெந்து வரிசை என்று வரிசைகள் உருவாகி வருகின்றன.

இப்போது மீண்டும் 1970 - 1977 யுகத்தை காணக்கூடியதாக உள்ளது. இதற்காகவா 69 இலட்சம் பேர் மக்கள் ஆணையை வழங்கினர். இந்த அரசுக்கு வேலை செய்ய முடியாது. விலைகளை அதிகரிக்க மட்டும்தான் முடியும்" - என்றார். (இ)

# கிடுகிடுவென உயர்ந்தன மரக்கறிகளின் விலைகள்

கொழும்பு, ஒக். 24



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு நாளாந்தம் வரும் மரக்கறிகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளமையால் மரக்கறிகளின் விலைகள் நூறு வீதத்தால் அதிகரித்துள்ளன என்று பொருளாதார மத்திய நிலைய முகாமையாளர் கிறிஸ்ரி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் நாட்டின் மரக்கறித் தேவையில் 70 சத வீதத்தை விநியோகிக்கின்றது.

இந்தநிலையில், கடந்த 21ஆம் திகதி முதல் மரக்கறி விலை கிடுகிடுவென உயரத் தொடங்கியுள்ளது என வியாபாரிகள் கூறுகின்றனர்.

இதன்படி, மலையகப் பகுதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து மரக்கறிகளின் மொத்த விலை கிலோகிராம் ஒன்று 200 ரூபாவைத் தாண்டியுள்ளது எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# வெள்ளைப்பூண்டு மோசடி: 6ஆவது சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக். 24

சதொச நிறுவனத்தில் இடம்பெற்றது எனக் கூறப் படும் வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் மற்று மொரு சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 56 வயதான வர்த்தகர் ஒருவரின் புதல்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சதொச நிறுவனத்துக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட சுமார் 150 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட சுமார் 56 ஆயிரம் கிலோகிராம் வரையிலான இரு வெள்ளைப் பூண்டு கொள்கலன்களை உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் இன்றி மூன்றாவது தரப் பொன்றுக்கு விற்பனை செய்த விவகாரத்தில் ஏற்கனவே ஐவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் ஆறாவது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐவரும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை, 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ)

# மூன்று செயலாளர்கள், இரு தூதுவர்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் குழு அனுமதி

கொழும்பு, ஒக். 24

மூன்று அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இரு தூதுவர்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

உயர் பதவிகள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியபோது இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, கமத்தொழில் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜே.எம்.உதித் கே.ஜயசிங்க, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ ஆகியோருக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

இதனைவிட இத்தாலி குடியரசுக்கான இலங்கைத் தூதுவராக ஜகத் வெல்லவத்தவை நியமிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு எடுத்த தீர்மானத்துக்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது. வெல்லவத்த இதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.

அதேநேரம், நைஜீரியா கூட்டாட்சிக் குடியரசுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி வகிக்கும் ஜே.எம்.ஜனக பிரியந்த பண்டாரவை மியன்மார் ஒன்றியக் குடியரசுக்கான தூதுவராக நியமிப்பதற்கும் இந்தக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது எனச் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால.டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, விஜித ஹேரத், ரிஷாத் பதியுதீன், தலதா அத்துகோரள ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# எஸ்.ரி.எப்பின் சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் நால்வர் கைது

கொழும்பு, ஒக். 24

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முவதோர உயன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு 12, பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிடோ சந்தியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 20 கிராம் 880 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். களுத்துறை வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 05 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாளிகாகந்தை பிரதேசத்தை சேர்ந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதுல்லவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 05 கிராம் 770 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

உ
குகமயம்

## நனி நன்றி

முருகன் பணியே முதற் பணியென,
முழுவாழ்வும் ஈந்த எம்தந்தை, கந்தனடியில்,
குகபதம் அடைந்த வேளை வருகை தந்து, துயர் துடைத்து,
ஆறுதல்கூறித் தேற்றிய, அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும்,
இணையங்கள், ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி
தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவிகளை உணர்வுடன்
ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை
வழிநடத்திய பெருமக்களுக்கும், ஆறுதல் கூறி அஞ்சலி
தெரிவித்த சிவாச்சாரியார்களுக்கும், இறுதி ஊர்வலத்திலும்,
தகனக்கிரியையிலும் கலந்துகொண்ட
அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்
இறுதி ஊர்வலத்தின் போது காத்திரமான பணியாற்றிய
யாழ் மாநகரசபையினருக்கும்...
"உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும்,
பங்களிப்பினையும் நீளநினைந்து,
நவில்கின்றோம்" நனி நன்றி.
முருகா சரணம்!

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு – நல்லூர் – யாழ்ப்பாணம்
24.10.2021

## கலவரங்கள்...

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் கரு ஜயசூரியவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கல்வித்துறைசார் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு நேற்றைய தினத்துடன் தீர்வுகாணப்படும் என்று நாட்டுமக்கள் அனைவரும் எதிர்பார்த்தனர். சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரும் பொறுமையுடன் செயற்பட்டிருந்தால் சுமார் இருவருடங்களின் பின்னர் மீண்டும் பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் தமக்குரிய சிறுவர் பராயத்தை அனுபவிப்பதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும். இருப்பினும் தற்போது மாணவர்கள் மிகவும் துரதிஷ்டவசமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி ஆசிரியர்கள் கடந்த காலங்களில் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் அடக்குமுறைகளுக்கும் அவமதிப்புக்களுக்கும் இலக்காகினர். முதலில் நாட்டுமக்களின் உணர்வுகளை அரசு தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே, தற்போதேனும் பழிவாங்கல் நடவடிக்கைகளை நிறுத்தி, அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதுமாத்திரமன்றி மறுபுறம் இரசாயன உரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், அதனால் மிகமோசமான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இரசாயன உரத்திற்குப் பதிலாக சேதன உரத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு மிகவும் நேயமானதாக இருந்தாலும், உலகின் வேறெந்தவொரு நாடும் மிகக்குறுகிய காலத்திற்குள் உரவகையின் பயன்பாட்டை மாற்றியமைப்பதற்கு அமுத்தம் பிரயோகித்ததில்லை. அவ்வாறு மாற்றியமைப்பது நடைமுறையில் சாத்தியமான விடயமும் அல்ல.

மிகப்பாரியளவிலான சேதன உரப் பயன்பாட்டுக்கு மாறிய பூட்டான் கூட, அந்தச் செயற்திட்டத்தில் வெற்றியடைவதற்கு எதிர்வரும் 2030ஆம் ஆண்டுவரையில் காத்திருக்கின்றது. இவையனைத்துக்கும் அப்பால் நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளும் நாட்டு மக்களும் வீதிகளில் இறங்கிப்போராட ஆரம்பித்தால், கலவரங்கள் கூட ஏற்படக்கூடும்.

அவ்வாறான நிலை தோற்றம் பெறுவதற்கு இடமளிக்கவேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். உர விவகாரத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலாக இதுகுறித்து நன்கு தேர்ச்சிபெற்றவர்கள் அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பகிரங்கமாகவே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தற்போது வெவ்வேறு நாடுகளில் இருந்தும் உரத்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உண்மையில் இதனை அரசு 6 மாதகாலத்துக்கு முன்னரேயே செய்திருக்கவேண்டும்.

தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற உரவகைகள் உரியவாறான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை. எனவே, சாதாரண விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கேற்றவாறு அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றுள்ளது. (இ)

## மாகாண சபை...

என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இது சம்பந்தமாக கடந்த சில வாரங்களாக சில சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு தனித்து போட்டியிட அந்த கட்சி தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் மேலும் சில சிறிய கட்சிகளை இணைத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் கீழ் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளை சுதந்திரக் கட்சி ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

பொதுஜன பெரமுன மீது தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை தாம் சுமக்கவேண்டியதில்லை என்பது சுதந்திரக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களின் நிலைப்பாடாக உள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதனடிப்படையில், ஏற்கனவே பகிரங்கமாக கூறியபடி, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் இருந்து விலகி, வடமேல் மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவார் எனவும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தனது தந்தையான பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவின் உரிமைக்கு அமைய வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## எதிர்காலத்தில்...

வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்த பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதைக் கூறமுடியாது. சீனா உலகில் உள்ள மிகப் பெரிய நாடுகளில் ஒன்று. ஐந்து நாள்கள் வேலை செய்யும் நாடு.

ஒரு நாள் மாத்திரமே திறக்கப்படுமாயின் உலகில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்.

நாம் பெரும்பாலான மூலப் பொருள்களைச் சீனாவிலிருந்தே இறக்குமதி செய்கின்றோம்.

எமக்கு மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால், எம்மால் சில தொழிற்சாலைகளை இயங்கச் செய்ய முடியாது. இதுதான் உலகில் தற்போதுள்ள புதிய சவால்.

உலகில் எரிபொருள் விலை அதிகரிப்பது இப்படித்தான், இலங்கை அதனை இப்படிதான் கட்டுப்படுத்த வேண்டும் எனச் சிலர் கூறுவார்களாயின் அது செயல்முறை சாத்தியமற்றது. உலக சந்தையில் எரிவாயுவின் விலை 130 வீதமாக அதிகரித்துள்ளது.

அந்த விலையைக் குறைக்கும் முறையை அறிந்தவர்கள் எவராவது இருந்தால் என்னைச் சந்திக்குமாறு கூறுங்கள்-என்றார்.

## நவ. 2 இல்...

தமிழ்த் தேசிய பரப்பில் செயலாற்றும் அனைத்து கட்சிகளின் கலந்துரையாடலை எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நேற்றைய கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட இணையவழியான கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா மற்றும் பேராசிரியர் சிவநாதன் (சி.வி.விக்னேஸ்வரன் சார்பில்) ஆகியோர் கலந்து கொண்டனர்" - என்றார். (இ)

## பி.சி.ஆர்....

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதே அதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், நாடெங்கும் எழுமாற்றாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை அரசு நடத்தவில்லையெனில் மீண்டும் பேராபத்து நிலைமை நிச்சயம் ஏற்படக்கூடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# சகல மத வழிபாட்டுத்தலங்களிலும் 50 பேருக்கு மேல் ஒன்றுகூடத் தடை



கொழும்பு, ஒக். 24

ஆலயங்கள் உள்ளிட்ட அனைத்து மத வழிபாட்டுத் தலங்களில் ஒன்றுகூடக் கூடிய உச்ச எண்ணிக்கை 50 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்களில் ஈடுபடுவது தொடர்பில் சுகாதார அமைச்சு வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இந்தப் பணிப்புரைகளை வெளியிட்டுள்ளார்.

வழிபாட்டுத் தலங்களில் சமூக இடைவெளி குறைந்தபட்சம் ஒரு மீற்றர் அளவில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசனங்களுக்கு இடையிலும் ஒரு மீற்றர் இடைவெளி பேணப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கைகளைக் கழுவுவதற்குத் தேவையான சவர்க்காரம், நீர் போன்ற வசதிகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# இலங்கை – கட்டார் இரு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பு



கொழும்பு, ஒக். 24

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் கட்டார் மத்திய வங்கியின் ஆளுநர் ஷெய்க் அப்துல்லா பின் சவூத் அல்-தானி ஆகியோருக்கிடையே முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

டோஹா நகரில் அமைந்துள்ள கட்டார் மத்திய வங்கியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் கட்டாருக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, கொரோனாத் தாக்கங்களில் இருந்து உரிய பொருளாதாரங்களைப் புத்துயிர்பெறச் செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் இலங்கை - கட்டார் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தல் போன்றவற்றில் இலங்கை மத்திய வங்கிக்கும் கட்டார் மத்திய வங்கிக்கும் இடையிலான ஒத்துழைப்பு மீதான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. (இ)

# நேற்று 553 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 24

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 553 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 35 ஆயிரத்து 528 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 350 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 3 ஆயிரத்து 90 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## 16 இராணுவத்தினர்...

உணவுக்கு பின்னர் புடிங் சிற்றுண்டியை உண்ட பின்னர் இவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து 16 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எவரும் ஆபத்தான நிலைமையில் இல்லை என இராணுவத்தின் தகவல்கள் கூறுகின்றன.

## மேலும் 19 பேர்...

சாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 593 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் உயிரிழந்தவர்களில் 10 பெண்களும் 09 ஆண்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu




# சொல்வதைச் செய்யாத அரசை விரட்டியடிப்போம்

## சஜித் அணி அறைகூவல்



கொழும்பு, ஒக். 24

**"இந்த அரசு சொல்வதைச் செய்வதில்லை; செய்வதைச் சொல்வதில்லை. இப்படிப்பட்ட அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெரும்போகம் ஆரம்பமாகி ஒரு மாதமும் சில நாட்களும் கடந்துள்ளன. எனினும், அரசானது பெரும்போகத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக்கொடுப்பதில் அசமந்த நிலையை அடைந்துள்ளது.

இன்றைய சூழலில் விவசாயிகள் அனைவரும் வீதிக்கு இறங்கி பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நெற்செய்கையாளர்கள் மட்டுமன்றி, கிழங்குச் செய்கையாளர்கள், தேயிலை செய்கையாளர்கள்,

மரக்கறி செய்கையாளர்கள் உள்ளிட்ட விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் அனைவரும் வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

அரசு இந்த நாட்டுக்கு - மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இதுவரை நிறைவேற்றிக்கொடுக்கவில்லை.

இரசாயன உரப் பயன்பாட்டிலிருந்து காபனிக் உர பயன்பாட்டுக்கு மாற வேண்டும் என்று வர்த்தமானியை வெளியிட்ட அரசு இன்று சகல விவசாயிகளையும் பாரிய பிரச்னைக்குள் தள்ளியுள்ளது.

இந்தியாவிலிருந்து உரத்தைக் கொண்டு வருவதாகக் கூறிய அரசு, தற்போதைய நிலையில் அங்கிருந்து உரத்தை இறக்குமதி செய்துள்ளது. விமானத்தின் மூலம் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் உரத்தைக் கொண்டுவருவதாக விசாய அமைச்சர் கூறியிருந்தார்.

எனினும், 25 ஆயிரம் மெட்ரிக் தொன் உரத்தையே கொண்டு வந்துள்ளது என அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள சகல விவசாயிகளையும் எடுத்துக்கொண்டால் 30 இலட்சம் மெட்ரிக் தொன் உரம் தேவையாகவுள்ளது.

எனினும், 25 ஆயிரம் மெட்ரிக் தொன் உரமே கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசு சொல்வதைச் செய்வதில்லை; செய்வதைச் சொல்வதில்லை" - என்றார். (இ)

## அதிக விலைக்கு சீனி விற்றால் கடுமையான சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக். 24

அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வோருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுக்கு சீனி கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு, அதிகாரசபைக்கு உண்டு. அத்துடன் அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வோர் தொடர்பில் பொதுமக்கள், நுகர்வோர் அதிகாரி சபை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியதும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தலைமையில் ஆளுங்கட்சியின் கூட்டம்

கொழும்பு, ஒக். 24

ஆளும் கட்சியின் விசேட கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி மாளிகையில் இன்று நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உரப்பிரச்சினை, அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கை, 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

ஆளுங்கட்சியின் அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)

### பத்து மாதங்களில்

## உப்பு நிறுவனத்துக்கு 16 கோடி ரூபா இலாபம்



கொழும்பு, ஒக். 24

இலங்கை உப்பு நிறுவனத்துக்கு இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 16 கோடி ரூபா இலாபம் கிடைத்துள்ளது என நிறுவனத்தின் தலைவர் நிஸாந்த சந்தபரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த அரசின் ஆட்சியின்போது 26 கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை இந்த நிறுவனம் எதிர்கொண்டிருந்தது. எனினும், இந்த ஆட்சியில் இந்த இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளது.

எமது இந்த நிறுவனத்துக்குக் கடந்த செப்டெம்பர் மாதம் மட்டும் 107 கோடி ரூபா இலாபம் கிடைத்துள்ளது" - என்றார். (இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 01 - 04 - 1943

உதிர்வு 20 - 10 - 2021

### திருமதி செல்லம்மா செல்வநாயகம்

யாழ்ப்பாணம், ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ராமையாச் செட்டியார் வீதியை வதிவிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா செல்வநாயகம் அவர்கள் 20-10-2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னாச்சி - தம்பிமுத்து தம்பதியரின் புதல்வியும், தெய்வானை - துரைச்சாமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகம் (சாந்தி ரயர் வேக்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கஜேந்திரன், சிவகுமார், சசிகலா (சாந்தி), பாலேந்திரன், விஜேந்திரன், சுவேந்திரன், சசிரேகா, சசிமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும்,ரிற்ரா, சாந்தினி, விஜயசிங்கம், சாதனா, ராதிகா, சந்திரா, குகன், பிரதிகாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும்,பிந்துஜா, இன்டிகா, ஜென்சிகா, வினோத்குமார், கிரிசாந், சோபி, சஞ்சய், சேயோன், ஹரேஷ், அகிரா, காயறீனா, சர்மிரா, ரிஷி, கவின், மாதேஷ், பிரணேஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,ஆரியா, ஆகஸ்ட், எமிலியா, மலீனா, லேயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 23 Oct 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம் :*
Sunday, 24 Oct 2021 7:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கஜன் - மகன்**
**Mobile : +14168756699**

தகவல்:
**குடும்பத்தினர்.**







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் தலைவர் இந்து குருமார் அமைப்பு
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி-திருடா திருடி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர் -நடிகை சாந்தா



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்




10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் டிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு